தினக்குரல்

யாழ் தினக்குரல் THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com

ஓசை : 020 குரல் : 255 புதன்கிழமை 24 நவம்பர் Wednesday 24th November 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12

அமெரிக்க தூதுவராக மகிந்த சமரசிங்க

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் தான் பதவி விலகவுள்ளதாக நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன் பக்கம் 02

கொரோனாவால் 24 பேர் உயிரிழப்பு

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்ட மேலும் 24 பேர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று அறிவித்தார்.

இவற்றுடன் நாட்டில் இதுவரையில் கொவிட்-19 பக்கம் 02

கிண்ணியாவில் பேரவலம்

பயணிகளுடன் புறப்பட்ட படகு உடைந்து கவிழ்ந்ததில் 5 சிறுவர்கள் உட்பட 7 பேர் பலி

என்.லெப்ரின்ராஜ்

திருகோணமலை,கிண்ணியா-குறிஞ்சாக்கேணி ஆற்றில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை பயணிகளை ஏற்றி சென்றுகொண்டிருந்த மோட்டார் இழுவைப் படகு உடைந்து, கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த ஏழு பேர் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுக் காலை 7.30 மணி அளவில் குறிஞ்சாக்கேணி கரையிலிருந்து கிண்ணியா நகரசபை கரையை நோக்கி பயணிகளை ஏற்றி வந்த படகே இவ்வாறு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தப் படகில் 23 பேர் பயணித்த அதேவே பக்கம் 02

கிண்ணியாச் சம்பவம் மனிதப் படுகொலையே

-அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

கிண்ணியா படகுப் பாதை விபத்துச் சம்பவத்தை மனித படுகொலைகளாகவே கருதுவதாகவும், இதனால் இந்த படகுப் பாதையை நடத்தியவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

படகுப் பாதை விபத்துச் சம்பவம் தொடர்பாக பாராளு பக்கம் 02

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும்
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
ரூ.87,000/=
• அதிகபட்ச இரகசியதன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
மேதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கிய நாடுங்கள்
தங்கக் கடன்
Brand Finance Rating 'A+' Fitch Rating: 'A' (lka)' கம்பனி பதிவிலக்கம் PQ 9
செலான் வங்கி

நாட்டுக்குத் தீ வைக்க அரசு முடிவெடுத்துள்ளது

-இனவாதம் மட்டுமே துருப்புச்சீட்டு - லக்ஸ்மன் கிரியெல்ல-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இந்த அரசுக்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. அரசின் துருப்புச்சீட்டு இனவாதம் மட்டுமே .அதுமட்டுமன்றி 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணி மூலம் நாட்டுக்கு தீ வைக்க அரசு முடிவெடுத்துள்ளதென எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல சாடினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை,இடம் பெற்ற ஜனாதிபதி, பிரதமருக்கான செல பக்கம் 02

இரு நாட்கள் வேலைநிறுத்தம்

-சுகாதார தரப்பு அறிவிப்பு-

க.பிரசன்னா

சுகாதார தொழில்நுட்ப வல்லுநர்களினால் கடந்த 17 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு உரிய தரப்பினர் தீர்வினை முன்வைக்காமையினால் நாளை மற்றும் நாளை மறுதினம் மீண்டும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியம் மற்றும் அரசாங்க மருத்துவ பக்கம் 02

தௌபீக் எம்.பி.யின் வீட்டின் மீது மக்கள் கடும் தாக்குதல்

-பல பகுதியிலும் ஆர்ப்பாட்டம்; கடைகள் பூட்டு-

படகு விபத்தில் பலரும் உயிரிழந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த கிண்ணியா மக்கள், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தினர்.

இந்தப் பாதுகாப்பற்ற இழுவைப் பாதைக்கு அனுமதி வழங்கியது யார்? உயிரிழப்புக்களுக்கு அவர்களே பதில் கூற வேண்டுமென தெரிவித்து கிண்ணியா புஹாரியடி சந்தி மற்றும் கிண்ணியா பிரதேச செயலகம் என்பவற்றுக்கு முன்னால் வீதியை மறித்து ரயர் பக்கம் 02

எந்த நேரத்திலும் நாடு முடக்கப்படலாம்

-பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம்-

க.பிரசன்னா

நாட்டில் கொவிட் தொற்றானது தொடர்ந்து அதிகரித்துச் செல்லுமாயின் வருட இறுதி அல்லது பண்டிகைக் காலப் பகுதிகளில் நாட்டை முடக்குவது ஆச்சரியமான விடயமல்லவென பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்று தொடர்பில் கடந்த பக்கம் 02

யுத்த பூமியை போல் இன்று வடக்கு- கிழக்கு பிரதேசங்கள்

-உறவுகளை நினைவு கூர அனுமதி கொடுங்கள்-சிறீதரன் எம்.பி.

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இறந்து போன அந்த ஆத்மாக்கள் துயிலும் இல்லங்கள் மேலே நீங்கள் சப்பாத்துக்கால்களால் மிதிக்கும் வரை இந்த நாட்டில் அமைதி,சமாதானம்,நல்லிணக்கம் ஏற்படப்போவதில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் உங்கள் இனவாதத்தை முதலில் தூக்கி வெளியே போடுங்கள். எமது மக்கள் இழந்த தமது உறவுகளை நினைவு கூர அனுமதி கொடுங்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி.யான சி.சிறீதரன் தெரிவித்தார். பக்கம் 02

ஊர்காவற்றுறை நீதிமன்றும் நிராகரிப்பு

மாவீரர் நாளுக்குத் தடை கோரிய விண்ணப்பத்தை ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 5 பேரின் பெயர் குறிப்பிட்டும் நெடுந்தீவு பொலிஸ் பிரிவில் ஒருவரின் பெயர் குறிப்பிட்டும் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தடை கோரி பொலி பக்கம் 02

புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வர்த்தகர்

-சபையில் கொக்கரித்த அமைச்சர் டக்ளஸ்-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வர்த்தகர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான செலவினத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. யான ஸ்ரீதரனின் உரை தொடர்பில் குறுக்கீடு செய்த போதே பக்கம் 02

-நினைவேந்தல் தடை கோரும் மனு-

எதிரணி முன்வரிசையில் இரு உளவாளிகள் !

-ஐக்கிய மக்கள் சக்தி கடும் சீற்றம்-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

எதிர்க்கட்சி பக்கத்தில் முன்வரிசை ஆசனங்களில் அமர்ந்துகொண்டு அத்துரலிய ரத்ன தேரர், அலி சப்ரி ரஹீம் ஆகிய எம்.பிகள் தொடர்ந்து அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்பை வெளியிட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, மற்றும் நளின் பண்டார எம்.பி. ஆகியோரே சபாநாயகரிடம் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

எதிர்க்கட்சியின் முன்வரிசையில் பாராளு பக்கம் 02

முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்

-எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

கிண்ணியாவில் விபத்துக்கு உள்ளான படகுப் பாதை இயங்கிய முறை மற்றும் அதன் சட்டப்பூர்வ தன்மை தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளையும், நிவாரணங்க பக்கம் 02

புதிய அரசியலமைப்பு வரைவில் எவ்வித இரகசியங்களும் இல்லை

-பிரதமர் மகிந்த ராஜபக்ஷ-

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

புதிய அரசியலமைப்பு வரைவு தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதில் எவ்வித இரகசியமான விடயங்களும் இல்லை எனவும் தெரிவித்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதம் நடத்த நடவடிக்கை பக்கம் 02

சாவகச்சேரி வாள் வெட்டில் ஒருவர் படுகாயம்

சாவகச்சேரி - கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கச்சாய் வீதி - சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 38வயதான சி.சிவபாலன் என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானவராவார்.

இவரது கை விரல் துண்டாடப்பட்டது பக்கம் 02

புதிய அரசியலமைப்பு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட நிறுவனங்களின் செலவின தலைப்புகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சிகளின் முன்மொழிவுகள் மற்றும் விமர்சனங்களுக்கு நாங்கள் உன்னிப்பாக செவிமடுத்தோம். சில விமர்சனங்கள் நியாயமற்றவை. சில விமர்சனங்களில் ஏதேனும் நியாயம் இருப்பின், அவற்றை நாம் ஏற்று திருத்திக் கொள்ள எந்நேரத்திலும் தயாராக உள்ளோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். அரசியலமைப்பு பற்றிப் பேசினீர்கள். நாம் இப்போது வரைவைத் தயாரித்து வருகிறோம். அதனை பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் சமர்ப்பித்து விவாதிப்போம் என்பதை நினைவூட்டுகிறேன். எனவே, இந்த விவகாரத்தில் இரகசியமாக எதையும் செய்ய மாட்டோம் என்பதையும் கூறிக்கொள்கின்றேன் என்றார்.

முறையான விசாரணை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளையும் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் கேள்வியெழுப்பி உரையாற்றும் போது, கிண்ணியாவில் விபத்து தொடர்பிலும் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இந்தப் படகில் 20 பேர் பயணித்துள்ளதாகவே அறிகின்றேன். இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்தின் தலையீட்டில் வழங்கக் கூடிய உயர்ந்தபட்ச நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று அந்த படகுப்பாதை நடத்தப்பட்ட முறை தொடர்பாகவும், அதன் சட்டப்பூர்வ தன்மை தொடர்பிலும் முறையான விசாரணை நடத்துமாறு யோசனை முன்வைக்கின்றேன். அதேபோன்று விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இந்த சபையின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துகொள்கின்றோம் எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

புலிகளின் தலைவர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீதரன் எம்.பி. தனது உரையில் , ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் தலைவர் ஞானசாரதேரர் ,போதைப்பொருள் பாவனை தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஏன் பேசுவதில்லை எனக் கேட்கின்றார். 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் போதைப்பொருள் பாவனை இருந்ததா?கஞ்சா இருந்ததா?அல்லது யாரவது இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டார்களா? போதைவஸ்தால் யாரும் பாதிக்கப்பட்டார்களா ? அல்லது யாரவது அதனை உட்கொண்டார்களா? 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த அரசின் ஆட்சி வந்த பின்னரே திட்டமிட்டு வடக்கில் போதைப்பொருள், கஞ்சாக்கள் பாவனைக்கு விடப்பட்டன. படைகள் குவிக்கப்பட்டுள்ள வடக்கில் தற்போது எப்படி போதைவஸ்துக்கள் தாராளமாக புழங்குகின்றன.? நாங்கள் எத்தனை தடவை இந்த போதைவஸ்துக்கள் தொடர்பில் இந்த சபையில் பேசியிருப்போம். நாம் போதைவஸ்துக்களுக்கு எதிரானவர்கள். எனக்கூறிக்கொண்டிருந்த போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறுக்கீடு செய்தார். எனினும் அவருக்கு மைக் வழங்கப்படாத நிலையில் சபை முதல்வரான தினேஷ் குணவர்தன எழுந்து சபைக்கு தலைமை தாங்கியவருக்கு சுட்டிக்காட்டியதையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நேரம் கொடுக்கப்பட்டது.

இதன்போதே விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வியாபாரி.அவர் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார். இது ஸ்ரீதரனுக்கு தெரியுமோ அல்லது மறைக்கிறாரோ தெரியாது.

அத்துடன் ஸ்ரீதரன் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது வடக்கின் வசந்தம் கிழக்கின் உதயம் என சில விடயங்களை செய்ததாக ஏற்றுக்கொள்கின்றார். அதற்கு முன்னர் ஏன் செய்யப்படவில்லை ?. அதற்கு முன்னர் செய்ய நீங்கள் விடவில்லை தடைகளை ஏற்படுத்தினீர்கள் என்றார். இதற்கு ஸ்ரீதரன் எம்.பி. பதிலளிக்கையில், நான் அரசுக்கு வக்காலத்து வாங்கும் கையாள் அல்ல. அரசினது கால்களைக் கழுவும் வேலையும் செய்பவனல்ல.அல்லது உயிருக்கு பயந்து கவச வாகனங்களில் பயணிப்பவனுமல்ல .தமிழர்கள் எதற்கும் துணிந்தவர்கள் என்று கூறிக்கொண்டிருந்த போது அவரின் நேரம் முடிவடைந்து விட்டதாக கூறி வேறு ஒருவருக்கு நேரம் ஒதுக்கப்பட்டது.

ஸ்ரீதரன் எம்.பி. -டக்ளஸ் தர்க்கத்தின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோரும் சபையில் இருந்தனர். அரச தரப்பின் கடுமையான கூச்சல்களுக்கு மத்தியிலேயே ஸ்ரீதரன் எம்.பி உரையாற்ற வேண்டியேற்பட்டது.

இரு நாட்கள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் ஆகியன தெரிவித்துள்ளன.

சுகாதார சேவையில் சம்பள முரண்பாடு காணப்படுவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அது சுகாதார அமைச்சின் செயலாளருக்குத் தெரியாது. அவருக்கு உண்மையில் எப்படி பேச்சுவார்த்தை நடத்துவது மற்றும் தீர்மானமெடுப்பது, ஒரு பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது தெரியாதென ஒன்றியத்தின் தலைவர் ரவிகுமுதேஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுகாதார தொழில்நுட்ப வல்லுநர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படாததன் காரணமாக மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நம்ம்ப 17 மருத்துவ ஆய்வுகூட நிபுணர்கள், துணை மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவ வல்லுநர்கள் நடத்திய அடையாள வேலைநிறுத்தம் தொடர்பில் சுகாதார அமைச்சோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை.

இதனால் ஏழு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இம்மாதம் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் மீண்டும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்குத் தீ வைக்க ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீனத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு சாடிய அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஏன் எமக்கு இன்னமும் வழங்கவில்லை?.சமல் ராஜபக்ச உபகுழு அறிக்கையை எமக்கு வழங்க முடியுமா? முடியாதா? பிரதமர் சபையில் உள்ளார், அவரிடமே இவற்றை கேட்கின்றோம். ஏற்கனவே முன்வைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மாற்றப்பட்டு புதிய பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. ஒவ்வொருவரை இலக்கு வைத்து அவர்களை தெரிவுசெய்து வழக்கு தொடுக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தொடர்பில் முதலில் தகவல் தெரிந்தவர் மீது வழக்கு தொடுக்கப்படாது அப்போதைய ஜனாதிபதியை குற்றவாளியாக்குவதன் மூலமாக இந்த வழக்கு தோற்கடிக்கப்படும். அதுமட்டுமல்ல ஒரு சிலரது தகவல்களை அரசு அழித்துவிட்டது. ஆகவே நீதிமன்றத்தை மிதித்துக் கொண்டு நியாயத்தை பெற்றுக்கொடுக்க முடியாது. இதேவேளை சகல அமைச்சுகளுக்கும் செயலணிகள் உருவாக்கப்பட்டு அமைச்சரவையை பலவீனப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதி சகல அதிகாரங்களையும் செயலணிகளை வைத்துக் கொண்டு இயக்கி வருகின்றார்.அதேபோல் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியை உருவாக்கி நாட்டுக்கு தீ வைக்க முடிவெடுத்துள்ளனர். இனவாதத்தை உருவாக்கி நாட்டை தீ வைக்கவே நினைக்கின்றனர். இந்த அரசுக்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. அவர்களின் துருப்புச்சீட்டு இனவாதம் மட்டுமே.அதனைத்தான் அவர்கள் முன்னெடுக்கின்றனர் என்றார்.

கிண்ணியாவில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளை,7 பேர் பலியானதுடன்,17 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

இதில் மூவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலுமொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததுடன்,இந்த அனர்த்தத்தில் பலியானவர்களில் 5 பேர் 8 வயதுக்கும் குறைவான பாடசாலை சிறுவர்கள் என்பது பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

கிண்ணியா- குறிஞ்சாக்கேணிப் பால நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருவதால் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக தற்காலிகமாக அமர்த்தப்பட்டிருந்த மோட்டார் இழுவைப் படகு வழமை போல்,நேற்று காலை 7 மணியளவில் 17 மாணவர்கள் உட்பட சுமார் 23 பேரை ஏற்றிக்கொண்டு தன்னுடைய பயணத்தை ஆரம்பித்தது.

பாடசாலைகள் முழுமையாக மீண்டும் ஆரம்பமாகியுள்ளதனால் இந்த படகில் ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்களுமே பெருமளவில் பயணம் செய்தனர். இந்நிலையில்,பயணத்தை ஆரம்பித்து சில நிமிடங்களில் படகு தடுமாற தொடங்கியதுடன், படகின் ஒரு பக்கமாக மெதுமெதுவாக நீருக்குள் மூழ்கத் தொடங்கியது. அப்பொழுது அதில் பயணித்த சிறுவர்கள் ,மற்றும் பயணிகள் அச்சமடைந்து செய்வதறியாது கதறியழத் தொடங்கிய நிலையில், கண் சிமிட்டும் நேரத்துக்குள் படகின் ஒரு பகுதி சரிந்து நீருக்குள் முழுமையாக மூழ்கத் தொடங்கியது. அதில் பயணித்த சிறுவர்கள்,மற்றும் பயணிகள் அனைவரும் கதறியபடியே நொடிப்பொழுதில் நீருக்குள் மூழ்கத் தொடங்கினர். இந்நிலையில்,படகில் பயணித்தவர்களின் கதறல் சத்தம் கேட்டு ஆற்றின் கரையில் நின்றவர்கள் மற்றும் சுற்றுவட்டாரத்தில் நின்றவர்கள் விரைந்து வந்து, நீரில் மெல்ல மெல்ல மூழ்கிக் கொண்டிருந்த சிறுவர்கள் மற்றும் பயணிகளை காப்பாற்றும் முயற்சியில் இறங்கினர். உடனடியாக கடற்படையின் விரைவு நடவடிக்கை கப்பல் படை, சிறப்பு கப்பல் படை மற்றும் சுழியோடிகள் அடங்கிய 8 நிவாரணக் குழுக்கள் களத்துக்கு விரைந்து வந்து நீரில் மூழ்கி கொண்டிருந்தவர்களை மீட்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தினர். ஆனால் படகில் பயணித்த 17 பேரை மாத்திரமே உயிருடன் மீட்க முடிந்தது. ஏனைய ஆறு பேருடைய உடலும் உயிரற்ற உடல்களாகவே மீட்பு குழுவினரால் மீட்க முடிந்தது.

இதில் உயிரிழந்த நிலையில், மூன்றரை வயது குழந்தை, மற்றும் 6 வயதுடைய இரண்டு சிறுவர்கள்,8 வயதுடைய 2 சிறுவர்கள் மற்றும் 30 வயதுடைய ஆசிரியை ஒருவர்,70 வயதுடைய ஒருவர் என 7 பேர் சடலங்களாக மீட்கப்பட்ட வேளையில், அப்பிரதேசத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கதறியழுத சத்தம் விண்ணைப் பிளந்ததுடன், அப்பிரதேசமெங்கும் சோகத்தை ஏற்படுத்தியது. கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் பழைய பாலத்துக்குப் பதிலாக புதிய பாலம் நிர்மாணிக்கப்படுவதனால் கிண்ணியா- குருஞ்சான்குளம் ஆகியவற்றுக்கு இடையில் படகு சேவை அண்மைக்காலமாக நடைபெற்றுவருகிறது.

மக்களுக்கான போக்குவரத்துக்காக இந்த ஆற்றினை கடப்பதற்கு இழுவை படகினை பயன்படுத்தி வந்துள்ளனர். எனினும் இந்தப் படகு சேவை ஆபத்தானது என பல தடவைகள் வலியுறுத்தி வந்த போதிலும் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை என அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்த பூமியை போல் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதம ருக்கான செலவினத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் மக்களாகிய நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். நாம் எமது பிள்ளைகளை இழந்துள்ளோம். ஆகவே நாம் எமது பிள்ளைகளை நினைக்கின்ற வணக்க முறைகளை நீங்கள் தடுப்பதன் மூலம் நீங்கள் எதனை அடையப்போகின்றீர்கள்?. அன்புக்குரிய சிங்கள மக்கள் கூட இதனை எதிர்க்கவில்லையே? 2016,2017,2018,2019 ஆண்டுகளில் எங்கேயாவது ஒரு சிங்கள பிரதேசத்திலே மாவீரர் தினத்துக்கு எதிராக சிங்கள மக்கள் யாரும் ஊர்வலம் கூட நடத்த வில்லையே? ஆனால் இந்த நாட்டிலே அரசியல் தேவைக்காக ஜனாதிபதியிலிருந்து அமைச்சர்கள் வரை தங்களது அரசியல் தேவைக்கவே இதனை செய்கின்றார்கள் என்ற விடயம் இப்போது தெளிவாகத் தெரிகின்றது.

ஆகவே இதிலிருந்து மாறுங்கள். மாவீரர்கள் புதைக்கப்பட்டிருக்கும் துயிலுமில்லங்களில் எல்லாம் இராணுவத்தினர் முகாம் அமைத்து சப்பாத்துக் கால்களுடன் பந்து விளையாடுகின்றார்கள். உங்களுடைய ஒரு குழந்தை அல்லது உங்களுடைய ஒரு சிங்கள வீரன் புதைக்கப்பட்ட இடத்தில் தமிழ் இராணுவத்தை சேர்ந்தவர்கள் இவ்வாறு நடந்தால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதனை நீங்கள் இந்த நாட்டின் தலைவராக,தந்தையாக, இந்த நாட்டினை சீரமைக்க நினைக்கின்ற ஒரு மனிதனாக நினைத்துப்பாருங்கள். இதே நிலையில் தான் இந்த நாட்டில் உள்ள ஏனைய இனங்களின் மன நிலையும் என்பதனை புரிந்து கொண்டால் இந்த நாட்டில் நல்லிணக்கம் என்பது மிக இலகுவாக ஏற்படுத்தக்கூடியது. அமைதி, பொருளாதாரம் என்பனவற்றை இலகுவாக கட்டி வளர்க்கலாம் என்றார்.

எந்த நேரத்திலும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிசம்பர் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாங்கள் சிறந்த பாடங்களைக் கற்றுக் கொண்டோம். தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, கடுமையான விதிமுறைகளை அமுல்படுத்தலாமா? அல்லது பொது முடக்கத்துக்கு செல்லலாமா? என்பதை அரசாங்கமே தீர்மானிக்கும்.

ஆனால் கொவிட் தொற்றானது தொடர்ந்து அதிகரித்துச் செல்லுமாயின் வருட இறுதி அல்லது பண்டிகைக் காலப்பகுதிகளில் நாட்டை முடக்குவது அல்லது பயணக்கட்டுப்பாடுகளை விதிப்பது ஆச்சரியமான விடயமல்ல. ஏனெனில் கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களில் இருந்து நாம் தீவிரமான பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளோம் என்றார்.

ஊர்காவற்றுறை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர். நேற்று இந்த விண்ணப்பம் மீதான விசாரணையின்போது பிரதிவாதிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, கனகரட்ணம் சுகாஸ் உள்ளிட்ட சிலர் ஆஜராகி தடை உத்தரவை பிறப்பிக்க கூடாதென வாதம் செய்தனர். இதனை விசாரித்த ஊர்காவற்றுறை நீதவான் அந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.(ச-40,75)

சாவகச்சேரி வாள்வெட்டில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன்,தோள்பட்டை,வயிறு,கை பகுதிகளிலும் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.-(ச-13,75)

எதிரணி முன்வரிசையில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்ன தேரர், அலி சப்ரி ரஹீம் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.எதிர்க்கட்சியின் வரிசையில் இருந்து ஒவ்வொரு தடவையும் இவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாகவே செயற்படுகிறார்கள். இவர்கள் எதிர்க்கட்சியில் இருந்து உளவாளிகள் போலவே செயற்படுகிறார்கள்.

அத்துரலிய ரத்ன தேரருக்கு முன்வரிசை வழங்கப்பட்டால் பரவாயில்லை. அலி சப்ரி ரஹீமுக்கு முன்வரிசை வழங்க வேண்டாம். பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களை சபாநாயகரால் நிலையியற் கட்டளையின் பிரகாரம் மாற்றியமைக்க முடியும் என்றார். எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவும் இதுதொடர்பில் தந்து எதிர்ப்பை வெளியிட்டார்.

எனினும் இவர்களுக்கான முன்வரிசை ஆசனம் என்பது கட்சிரீதியாக எடுக்கப்பட்ட தீர்மானம் என்பதனால் இதில் தன்னால் தலையீடுகளை மேற்கொள்ள முடியாது என சபாநாயகர் தெரிவித்தார்.

அமெரிக்க தூதுவராக ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றத்தில் அறிவித்தார்.

அமெரிக்க தூதுவராக பதவியேற்கவுள்ளதாலேயே தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார். எனக்கு வாக்களித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பிய மக்களுக்கு நன்றியை கூறிக்கொள்கின்றேன். 27 வருடங்களாக இந்த பாராளுமன்றத்தில் சேவையாற்றியே நான் இப்போது அமெரிக்கா செல்கின்றேன் என்று அவர் கூறினார்.

(மற்றொரு செய்தி பக்கம்-09)

கொரோனாவால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றினால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14,182 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று அறிவிக்கப்பட்ட மரணங்களில் 15 ஆண்களும் 9 பெண்களும் அடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ச)

தௌபீக் எம்.பி.யின் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை எரித்தும் பொதுமக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

தமக்கான போக்குவரத்து வசதிகள் இல்லாமை, தம்மை அரசியல் தலைமைகள் கண்டு கொள்ளாமை ஆகிய காரணங்களினால் இன்று பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த கிண்ணியா மக்கள், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் இல்லத்தின் மீது மதியம் கடும் தாக்குதல் நடத்தினர்.இதனால் வீட்டிற்கு பலத்த சேதம் ஏற்பட்டது. வீட்டின் பாதுகாப்பு கமராக்கள் உடைக்கப்பட்ட நிலையில் வீட்டு கதவு உடைக்கப்பட்டு சேதங்கள் விளைவிக்கப்பட்டன.

அத்துடன் அவரின் வீட்டுக்கு முன்னாலும் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் கிண்ணியா பிரதேச செயலகம் முன்னாலும் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் இந்த அனர்த்தத்துக்கு அதிகாரிகளும் பொறுப்பு கூற வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த அனர்த்தத்தை அடுத்து கிண்ணியாவில் பொதுமக்கள் இளைஞர்கள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பத்தையடுத்து கிண்ணியாவில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டுதுக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கிண்ணியாச் சம்பவம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சிறுவர்களை படகில் அழைத்துச் செல்லும் போது உயிர்காப்பு அங்கிகளை அணிந்திருக்கவில்லை என்றே பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சட்டத்தை செயற்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளேன். அந்த படகுச் சேவையை நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் நாட்டின் சட்டத்திற்கமைய இது மனித கொலையே, இதனை அரசியலுக்குள் கொண்டு செல்ல வேண்டாம் என்றார்.

இலங்கை வந்துள்ள ஐ.நா. அதிகாரி தமிழ்க் கூட்டமைப்பினருடன் சந்திப்பு

இலங்கை வந்துள்ள ஐ.நா. வின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக் கான உதவி பொதுச் செய லாளர் நாயகம் மொஹமட் காலித் கியாரி நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த் தன், தமிழரசுக் கட்சித் தலை வர் மாவை சேனாதிராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட கூட்ட மைப்பினர்

அரசாங்கம் கொண் டுவர வுள்ள புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் பிரச் சினைகளுக்கு உரிய தீர்வாக அமையும் என்ற நம்பிக்கை தங்களுக்கு இல்லை எனத் தெரிவித்தனர்.

அத்துடன், ஏற்கனவே, அரசி யலமைப்பில் உறுதி செய்யப் பட்ட 13 ஆவது திருத்தச் சட் டம் முழுமையாக அமுல்படுத் தப்படாமை குறித்தும் அவர்

கள் சுட்டிக்காட்டினர். பயங்கரவாத தடைச் சட்டம் குறித்த சர்வதே சத்தின் கரிசனைகள் கண்டுகொள்ளப்படா மல் இச்சட்டத்தின் கீழான கைதுகள், அரசியல் பழிவாங்கல் கள் தொடர்கின்றன. தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் இனப்பரம்பலை மாற் றியமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் கூட்டமைபினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐ.நா. மனித உரி மைப் பேரவை தீர்மானம் குறித்து எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடையே உள்ளது. அந்த மக்கள் நம்பிக்கை இழக்காத வகையில் தீர்மானத்தை நிறை வேற்ற இலங்கைக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண் டும் எனவும் கோரப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஐ.நா. வின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக் கான உதவி பொதுச் செய லாளர் ஐ.நா. தீர்மானங்களை நிறைவேற்ற இயன்றவரை அரசுக்கு அழுத்தம் கொடுக் கப்படும் எனத் தெரிவித்தார் என கூட்டமைபினர் தெரிவித் தனர்.

ஜனாதிபதியைச் சந்தித்த ரஷ்ய பாதுகாப்புச் சபை செயலாளர்

-அடிப்படைவாத செயற்பாடுகளை தடுப்பதற்கு ஒத்துழைப்பு-

ரஷ்யாவின் பாதுகாப்புச் சபை செயலாளர் நிக்கொ லாய் பட்ருஷெவ், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை, ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் சந்தித்தார்.

சோவியத் சோசலிச குடியரசி ன் அரச புலனாய்வுச் சேவை மற்றும் ரஷ்ய ஃபெட ரல் பாதுகாப்புச் சேவை ஆகிய வற்றில் நீண்டகால அனுபவத் தைக் கொண்டுள்ள நிக்கொ லாய் பட்ருஷெவ் , 2008ஆம் ஆண்டு முதல், ரஷ்யாவின் பாதுகாப்புச் சபை செயலாள ராகப் பணியாற்றி வருகின்றார்.

இலங்கை மற்றும் ரஷ்யா வுக்கு இடையிலான இரு தர ப்புத் தொடர்புகள், 2022 பெப்ரவரி 19 ஆம் திகதியுடன் 65 ஆண்டுகள் பூர்த்தியை அடைகின்றன. நிக்கொலா யின் இந்த விஜயத்தின் மூலம், இரு நாடுகளுக்கும் இடை யிலான தொடர்புகள் மேலும் பலப்படுத்தப்படுவதாக, ஜனாதிபதி இதன்போது தெரி வித்தார்.

நிக்கொலாய் பட்ருஷெவ் கொண்டுவந்த கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதி ரான ஸ்பூட்னிக் தடுப்பூசிகள் 5,000 மற்றும் கொவிட் தடுப்பூசியேற்றலை வெற்றி கொள்ள ரஷ்யா வழங்கிய ஒத் துழைப்பு, கொவிட் பரவலுக்கு மத்தியிலும் ரஷ்யப் பிரஜைகள் 49,379 பேர் கடந்த ஆண்டு இலங்கைக்கு சுற்றுலா வந் தமை போன்றவற்றுக்கு, ஜனா திபதி அவர்கள் நன்றியைத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர் என்ற வகையில், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சமாதானம் மற்றும் பாதுகாப் புக்காக முன்னிலையாவது தொடர்பில் , ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் போது இலங்கைக்கு வழங்கிய ஒத்து ழைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் பயங்கரவாத ஒழிப்புப் போரின் போது, ரஷ்யா பாரிய ஒத்துழைப்பு களை நல்கியுள்ளது. புலனாய் வுத் தகவல் பரிமாற்றங்கள், பயங்கரவாத நடவடிக்கைக ளுக்கான பணப் பயன்பாட் டைத் தடுத்து நிறுத்தல் உள்ளிட்ட அடிப்படைவாத, பயங்கரவாத மற்றும் சைபர் நடவடிக்கைகளை நிறுத்து வதற்கான இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு களை மேலும் பலப்படுத்த இலங்கை தயாராக உள்ள தென்று, நிக்கொலாய் பட்ரு ஷெவிடம் ஜனாதிபதி தெரி வித்தார்.

கொரோனா விழிப்புணர்வு

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் கொரோனா விழிப்புணர்வுச் செயற்பாடு இடம் பெற்றது.

பெற்றோர்கள், மாணவர்க ளுக்கான கொரோனா விழிப் புணர்வு கருத்தூட்டல் செயற் பாடு நேற்று மேற்கொள்ளப் பட்டது..

கரைச்சி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கஜேந்திரா இந்த கருத்தூட் டலை செய்திருந் தார். கொரோனா பாதுகாப்பு, தடுப் பூசி ஏற்றுதல் அதனது தாக்கங்கள் பற்றி நேரடியா கவே பெற்றோர்கள் கேட்டு விளக்கங் களை பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பாட சாலைகளின் பெற்றோர் கள், மாணவர்களுக்கான கொரோனா விழிப்புணர்வு கருத்தூட்டல் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

(27)

இனந்தெரியாத சடலம் மீட்பு

பூநகரி பொலிஸ் பிரிவிற் குட்பட்ட கௌதாரி முனை கல்முனை கடலில் இனந்தெ ரியாத நபர் ஒருவரின் சடலம் இனங்காணப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கௌதாரி முனை கல்முனை கடல் பகுதியில் நேற்று காலை சடலம் ஒன்று கிடப்பதாக பூநகரி பொலிசாருக்கு தகவல் வழங் கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலி சார் சடலத்தை பார்வையிட்ட னர்.

குறித்த சடலம் ஆணொருவ ரின் என பொலிசார் தெரிவித் துள்ளனர். மேலதிக விசார ணைகளை பூநகரி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

(52)

கொடிகாமத்தில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு

கொடிகாமம் வேம்பிராய் பகுதியில் நிலத்தில் புதைக் கப்பட்டிருந்த பெருமளவு பழமை வாய்ந்த வெடி பொருட்கள் மீட்கப்பட் டுள்ளன.

மேற்படி பகுதியில் உள்ள வீட்டின் உரிமையாளர் நேற்று செவ்வாய்க்கிழமை நிலத்தினை தோண்டியபோது வெடி பொருட்கள் சில தென் பட்டன. இதனையடுத்து கொடிகாமம் பொலீசாருக்கு தெரிவிக்கப்பட்டு விசேட அதிரடிப் படையின் உதவி யுடன் அப் பகுதி தோண்டி சோதனை மேற்கொள்ளப் பட்டது. இதன்போது மிதி வெடி, ஆர்.பி.ஜி, மகசின் , மோட்டார் குண்டு, டாங்கி தகர்ப்பு குண்டு உள்ளிட்ட பெருமளவு வெடி பொருட் கள் மீட்கப்பட்டுள்ளன.

(13-75-44)

குறிஞ்சாக்கேணி பாலத்தை நிர்மாணித்திருந்தால் மாணவர்களின் மரணங்களை தவிர்த்திருக்கலாம்

-முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா-

'கிண்ணியா குறிஞ் சாக்கேணிபாலத்தை நிர்மாணிக்க அப்பகுதித் அரசியல் தலைவர்கள் உடனடியாக நடவ டிக்கை மேற்கொள்ள வேண்டுமென கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா வலியு றுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத் துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

இன்று (நேற்று)காலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் உள்ள ஆற்றில் 20 மாணவர்களுடன் பயணித்த படகு கவிழ்ந்ததில் 6 மாண வர்கள், மரணமடைந்தனர். இச்சம்பவம் கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றேன்.

இது ஒரு மிகப் பரிதாபகரமான சம் பவம். இந்தப்பாலம் அமைக்க பலரா லும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அமைக்கப்படாதது துரதிஷ்ட வசமாகும். அது அமைக்கப் பட்டிருந்தால் இம் மரணங்க ளைத் தடுத்திருக்க முடியும். இப் பாலமானது நிர்மாணிக்க அப்பகுதித் அரசியல் தலை வர்கள், சமூக ஆர்வலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் அத்தி யாவசியமாகும்

என்னை கொல்ல முயன்ற விடயத்தில் ரணில் தப்பியது மஹிந்தவினால்தான்

-அதனால்தான் விட்டேன் என்கிறார் அமைச்சர் மஹிந்தானந்த

பா. கிருபாகரன் -
ந. ஜெயகாந்தன்

என்னை கொலை செய்ய முயற்சித்த விவகாரத்தில் பிரத மர் மஹிந்த ராஜபக்ஷவினால் தான் ரணில் விக்கிரமசிங்க தப்பினார் .ரணில் விக்கிரமசி ங்க மீது என்னால் முறைப்பாடு செய்திருக்க முடியும். எனினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அந்த விடயத்தை விட்டு விடுங்கள் என என்னிடம் கேட்டுகொண்டதாலேயே ரணில் மீது முறைப்பாடு செய்யவில்லை என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கம தெரி வித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஜனாதிபதி பிரதமர் ஆகியோருக்கான செலவின தலைப்புக்கள் மீதான குழு நிலை விவாதத்தில் உரை யாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறு கையில்;

கடந்த நல்லாட்சி அர சாங்கத்தில் நான் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பலர் பழிவாங்கப்பட்டோம். முதல் 10 திருடர்கள் என அப் போதைய ஆளுந் தரப்பினர் தொடர்பில் நான் முறைப்பாடு செய்து 2 வருடங்களாகின்றன. எனினும் இதுவரையில் ஒருவ ரிடமிருந்து கூட வாக்குமூலம் பெறப்படவில்லை.

இதேவேளை எதிர்க்கட்சியின் முன்வரிசையில் உள்ள உறுப்பி னர் ஒருவர் தொடர்பில் என் னிடம் இருக்கும் ஆதாரங்களை வைத்து வாக்குமூலம் வழங் கினால் பிணை கூட வழங் காது அவரை கைது செய்து சி றையில் அடைப்பார்கள். அந்த முன்வரிசை உறுப்பினர் மட்டு மல்ல அவரது முழுக் குடும்ப மும் கைது செய்யப்படும்.

இதேபோல முன்னாள் எம்.பி ரஞ்சன் ராமநாயக்கவுடன் இணைந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னை கொலை செய்ய முயன்றார் என முறைப்பாடு செய்தால் ரணி லும் கைது செய்யப்படுவார். இந்த விடயத்தை விட்டுவிடுங் கள் என பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ கேட்டுகொண்டதாலேயே நான் இந்த விடயத்தை விட்டு விட்டேன் .அதனால் ரணில் தப்பித்தார்.

அப்போது பொலிஸு க்கு பொறுப்பான அமைச்சராக இருந்த சாகல ரத்னாயக்க பாதாள உலகத்திற்கு உதவி னார்.ஆனால் பாதாள உல கத்தை ஒழித்தது கோத்தபாய ராஜபக்ஷ தான்.இன்று பாதாள உலகத்தினரை காண முடிகிற தா?

எமது ஆட்சியில் நாம் யாரை யும் பழிவாங்கவில்லை. ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதை தடுக்கவோ குழப்பவோ இல் லை. பழி வாங்குவதை நிறுத்து மாறு ஜனாதிபதியும் பிரதமரும் எமக்கு கூறியுள்ளனர்.ஜனாதிப தியை விரும்பியவாறு விமர்சி க்க முடிகிறது. நாட்டுக்காக சிறந்த கொள்கைகளை கொண் டுவந்தவரை விமர்சிக்கின்ற னர். ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவாகி முதலாம் வருடத் தில் 1.3 பில்லியன் ரூபா தான் செலவிட்டார். மைத்திரிபால சிரிசேன 3.07 பில்லியன் ரூபா செலவிட்டார். கோத்த பாய ராஜபக்ஷ 1.7 பில்லி யன் ரூபாவை மக்களுக்காக எஞ்சவைத்தார். 200 வாகனங் களை முன்னாள் ஜனாதிபதி பயன்படுத்தினார்.ஆனால் எமது ஜனாதிபதி 10 வாகனங் களை மாத்திரம் தான் பாவிக்கி றார். தனியார் வாகனங்களுக் கான எரிபொருள் செலவை அவரே செய்கிறார். என்றார்.

ஐ.ம.ச.வின் 21 உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் மீண்டும் ஐ.தே.க.வில்

க.பிரசன்னா

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி, ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த ஹம் பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 21 உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் மீண்டும் கட்சியில் இணைவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரி வித்துள்ளது.

இந்த மக்கள் பிரதிநிதிகளில் ஒன்பது பேர் ஐக்கிய தேசி யக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்தனவுடன் கடந்த 21ஆம் திகதி மாலை அம்பலாந்தோட்டை நோனா கமவில் இடம்பெற்ற கலந்து ரையாடலின் பின்னர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டவர்க ளில் தங்காலை மாநகர சபை உறுப்பினர் மொஹமட் சி ராஸ், ஹம்பாந்தோட்டை மாந கர சபை உறுப்பினர்களான தினேஷ் தர்ஷன, எம். மொஹ மட் ரிஸான், ஷரீப்தீன் பாரிஸ், எஸ்.அருண சாந்த, மொஹ மட் சம்சுதீன், திஸ்ஸமஹாராம பிரதேச சபை உறுப்பினர் ஏ.பி. தம்மிக்க, தங்காலை பிர தேச சபை உறுப்பினர் சமன் குமார, அம்பலாந்தோட்டை பிரதேச சபை உறுப்பினர் அஹமட் ஷகூர் ஆகியோர் உள்ளடங்குவர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதர வளித்தமைக்காக இவ் உறுப் பினர்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுக் காற்றுக் குழு அண்மையில் ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தியிருந்தது.

இதன்படி, ஐக்கிய தேசி யக் கட்சியின் கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள், அவற்றை முறியடிக்கும் வகையில் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தொலை நோக்கு வேலைத்திட்டம் குறித்து வஜிர அபேவர்தன விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிலையில் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலை மையிலான ஐக்கிய தேசி யக் கட்சி அரசாங்கத்தை அமைக்கும் வேலைத்திட் டத்தை அமுல்படுத்துவதற்கு தீவிரமாக ஆதரவளிக்க உடன் பட்டிருந்ததாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஹம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆனந்த குல ரத்ன, முன்னாள் பாராளுமன்ற பிரதி சபாநாயகர் சிறி அந்தோ ஹன்னதி, தென் மாகாண ச பையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் அசோக தனவன்ச, ஹம்பாந்தோட்டை தேர்தல் அமைப்பாளர்கள் மற்றும் உள் ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பாலாவியில் அடிதடி; ஒருவர் காயம்

கொடிகாமம்-பாலாவி வடக்கு பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம் பெற்ற அடிதடிச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் காயமடைந் துள்ளார்.

பாலாவி வடக்கு கொடி காமம் பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞன் ஒரு வரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.தாக்குதல் சம் பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்-(13)

மாபெரும் குருதிக் கொடை முகாம் இன்று

சிவா அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள இரத்த வகைகளின் பற்றாக் குறையைத் தீர்க்கும் உயிர் காக்கும் திட்டத்தின் முதற் செயற்திட்டமாக மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை-08 மணி முதல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவில் நடைபெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் குருதிக் கொடை ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள் ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர்.(18)

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 257, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பங்கு:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
புதன்கிழமை 24 நவம்பர் 2021 Wednesday 24th November 2021

நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை மருத்துவ ஆலோசனையின்றிப் பயன்படுத்துதல்

கொரோனா வைரஸ் தொற்றுநோயிலிருந்து குணமடைவதற்கு மருத்துவர்களின் பரிந்துரையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்துவது பாரதூரமான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துமென இலங்கை நுண்ணுயிரியலாளர்கள் கல்லூரி எச்சரித்திருக்கிறது. நுண்ணுயிர் எதிர்ப்புகளின் தேவையற்றதும் மிகையானதுமான பயன்பாடு காரணமாக 'நுண்ணுயிர் எதிர்ப்பு' மருந்துகளின் வீரியம் குறைவடைந்துவருவது இப்போது உலகளாவிய சுகாதார நெருக்கடியாக உருவாகி வருகிறது. வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த அதிக எண்ணிக்கையிலான மக்கள் நுண்ணுயிர் எதிர்ப்புகளைப் பயன்படுத்துகின்றனர். இதனால் முன்னர் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளைப் பயன்படுத்தி சிகிச்சையளிக்கப்பட்ட நோய்களைக் கட்டுப்படுத்த முடியாதென்று இலங்கை நுண்ணுயிரியலாளர்கள் கல்லூரியின் தலைவரும் சிகிச்சைக்கான ஆலோசகருமான நுண்ணுயிரியலாளர் டாக்டர் கீதிகா பட்டபெந்திகே தெரிவித்திருக்கிறார். நுண்ணுயிர் எதிர்ப்புகளின் தவறான பயன்பாடு மற்றும் அதிகப்படியான பயன்பாடு ஆகியவற்றின் விளைவாக 2050 ஆம் ஆண்டளவில் சுமார் 1 கோடி மக்கள் நுண்ணுயிர் எதிர்ப்புகளை எதிர்க்கும் பக்டீரியாக்களுக்கு பலியாவார்கள் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்திருக்கிறது.

நுண்ணுயிர் எதிர்ப்புகளை அதிகப்படியாக பயன்படுத்துதல் பக்டீரியாவைச் சமாளிப்பதை கடினமாக்குகிறது என்று பல தசாப்த காலமாக நிபுணர்கள் எச்சரித்து வருவதையடுத்தே அழிக்க அல்லது பெருகாமல் இருக்க மருந்துகள் உருவாக்கப்பட்டன. 1928 இல் கண்டுபிடிக்கப்பட்ட பென்சிலின் மருந்தே. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட முதல் நுண்ணுயிர் எதிர்ப்பு ஆனது.ஆனால் காலப்போக்கில், நுண்ணுயிர் எதிர்ப்புகளால் பக்டீரியாக்களின் பரவலான அழிப்பும் மற்றும் எதிர்ப்புத் தன்மை குறைவடைந்ததும் பக்டீரியா பரவுவதற்கு இடமளித்தது. நுண்ணுயிர் எதிர்ப்பு – எதிர்ப்பு கிருமிகள் வழமையாக மருந்துகளால் பாதிக்கப்படக்கூடிய பக்டீரியாக்களுக்கான அவற்றின் பாதுகாப்பையும் மாற்றிக்கொள்ள முடியுமென்றும் நாம் பார்க்கும் பெரும்பாலான எதிர்ப்புகள் , எதிர்ப்பை மாற்றும் அந்தத் திறன் காரணமாக குறிப்பாக வேகமாக பரவும் மற்றும் அபாயகரமானவை என்று நுண்ணுயிரியலாளர் கிறிஸ்டியன் லெஸ்டர்லின் கூறுவதாக ஏ.எவ் பி. செய்திச் சேவை குறிப்பிட்டிருந்தது.இதன் பெறுபேறாக , நுண்ணுயிர் எதிர்ப்புகள் நோய்த்தொற்றுகளுக்கு எதிராக குறைவான விளைவைக் கொண்டனவாக உருவாகின்றன.

நுண்ணுயிர் எதிர்ப்புக்கான அண்டிபயோடிக் எதிர்ப்பு என்பது ஒரு இயற்கையான நிகழ்வாகும். ஆனால் சக்தி வாய்ந்த மருந்துகளின் பரவலான பயன்பாடு மற்றும் அதிகப்படியான பயன்பாடு மூலம் மனிதர்கள் அந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளனர்.சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு, வளர்ச்சியடைந்த நாடுகள் பருவகால காய்ச்சலுக்கு சிகிச்சையளிக்க நுண்ணுயிர் எதிர்ப்புகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து எச்சரிக்கத் தொடங்கின. இது ஒரு வைரஸால் ஏற்படுகிறது, பக்டீரியாவால் அல்ல. 2010 அளவில், செல்வந்த நாடுகளில் மனிதர்களில் நுண்ணுயிர் எதிர்ப்புகளின் பயன்பாடு உறுதிப்படுத்தப்பட்டது. இருப்பினும் வளர்ந்துவரும் நாடுகளில் அவற்றின் பரவல் அதிகரித்து வருகிறது. மக்கள் மருந்துகளுக்கான சிறந்த அணுகலைப் பெறுகிறார்கள்.அமெரிக்காவில் உள்ள ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் 2018 ஆம் ஆண்டு அறிக்கையின்பிரகாரம் , 2000 முதல் 2015 வரை நுண்ணுயிர் எதிர்ப்புகளின் உலகளாவிய பாவனை 65% அதிகரித்துள்ளது. இது குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் உள்ள பயனாளிகளால் இயக்கப்படுகிறது. கொவிட் 19 நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்த மருத்துவர்களின் பரிந்துரை இல்லாமல் நுண்ணுயிர் எதிர்ப்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு நுண்ணுயிரியலாளர் டாக்டர் கீதிகா பட்டபெந்திகே பொது மக்களை வலியுறுத்தியிருக்கிறார்.

மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்களில் தொற்றுநோயைத் தடுக்கவும் சிகிச்சையளிக்கவும், பங்கக எதிர்ப்பு மருந்துகள், நுண்ணுயிர் எதிர்ப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. பக்டீரியா, வைரஸ்கள், பங்கக மற்றும் ஒட்டுண்ணிகள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன, மேலும் அவை ஏற்படுத்தும் நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு இனி பதிலளிக்காதென கூறப்படுகிறது. இந்த நுண்ணுயிர் எதிர்ப்புகளுக்கான எதிர்ப்பு நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்சையளிப்பதை கடினமாக்குகிறது. இது நோய் பரவல், கடுமையான நோய் மற்றும் மரணத்திற்கான அபாயத்தை அதிகரிக்கிறது. இது இயற்கையாகவே பொதுவாக மரபணு மாற்றங்கள் மூலம் வெளிப்படுகிறது.மனிதர்கள், கால்நடைகள் மற்றும் விவசாயத்தில் நுண்ணுயிர் கொல்லிகளின் அதிகப்படியான பயன்பாடும் தவறான பயன்பாடும் நுண்ணுயிர் எதிர்ப்புகளின்செயற்படாத தன்மையை துரிதப்படுத்தியுள்ளன . சளி, காய்ச்சல், பெரும்பாலான இருமல் மற்றும் தொண்டைப் புண் போன்ற வைரஸ் தொற்றுகளுக்கு எதிராக நுண்ணுயிர் எதிர்ப்புகள் பயனுள்ளவையாக இல்லை. நுண்ணுயிர் கொல்லிகளுக்கான எதிர்ப்பை "உலகளாவிய ஆரோக்கியம், உணவுப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான மிகப்பாரிய அச்றுத்தல்களில் ஒன்று" என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளமை கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம்.

உள்சார் கட்டமைப்பு நாட்டுக்கு முதலீடுகளைக் கொண்டுவரும்

கப்ராள் கூறுகிறார்

எங்களிடம் பொருளாதார ஸ்திரத்தன்மை உள்ளது. அதேவேளை குறைந்த வட்டி வீதமானது ரூபாவின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடையாமல் தடுக்கின்றது. நாங்கள் ஏற்கனவே பெரும்பாலான வர்த்தக சங்களைப் பார்த்திருக்கிறோம். குறிப்பாக பெரியவை வளர்ந்துள்ளன. மேலும் சிறு வணிகங்களும் நன்றாக செயற்பட முடிந்தால் அப்போது நாம் முழுமையான மீட்புக்கான பாதையில் செல்வோமென நான் நினைக்கிறேன். கற்றுலாவும் அதன் ஆதரவை அளித்தவுடன் மீண்டும் எழுச்சிபெறத் தொடங்கும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் உங்களுக்குத் தெரியும், சுமார் 500,000 பேர் கற்றுலாவை அவர்களின் பிரதான வாழ்வாதாரமாக நம்பியுள்ளனர். அதே நேரத்தில், ஏனைய வருமானம் மற்றும் நன்மைகளைத் தவிர, கற்றுலாத் துறையில் இருந்து மறைமுகமாக அனுகூலங்களை பெறுபவர்களும் பலர் உள்ளனர். சில சமயங்களில் ஏற்படும் விளைவுகளால் மக்கள் உடனடியாக ஏமாற்றமடைவார்கள். ஆனால் காலப்போக்கில் எந்தவொரு அரசாங்கமும் செய்ய முடியாத அளவுக்கு இந்த அரசாங்கம் சிறப்பாகச் செய்துள்ளது என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். இவ்வாறு நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராள் தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார்.டெய்லி மிரர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். பேட்டி வருமாறு;

Q நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது இரகசியமல்ல. இந்த மிகவும் ஆபத்தான சூழ்நிலையில், 2022 பட்ஜெட்டில் இருந்து என்ன நிவாரணத்தை மக்கள் எதிர்பார்க்க முடியும்?

பதில்:நீங்கள் சொல்கின்ற , நாட்டில் வியாபித்திருக்கும் துயரமான சூழ்நிலையும் சவாலான சூழ்நிலையும் சரிதான். இது உலகின் ஏனைய சகல நாடுகளிலும் காணப்படுவதும் உண்மைதான்.அதேநேரத்தில் எமது பொருளாதாரத்தின் மீது ஸ்திரத்தன்மையையும் நம்பிக்கையையும் கொண்டுவருவதை உறுதி செய்வதுதான் இன்றைய தேவை. அவ்வாறு செய்யும்போது, நாம் ஏற்படுத்தியிருக்கும் பொருளாதாரக் கட்டமைப்பு புதிய முதலீடுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஈர்ப்பதை உறுதி செய்து, அதேநேரத்தில் பொருளாதாரச் செயற்பாடுகள் நிலைத்து நிற்கும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். நாங்கள் அதைச் செய்தால், நாங்கள் அதை வெற்றிகரமாகச் செய்துள்ளோம் என்று நான் நம்புகிறேன். இலங்கையின் பொருளாதாரம் மீண்டுமொரு முறை மீட்சியடையும் பாதையில் செல்வதை நீங்கள் காண்பீர்கள்.

இந்த ஆண்டு சுமார் 5% வளர்ச்சி விகிதம் இருக்கும். முதல் அரையாண்டில் நிகர தேசிய உற்பத்தியில் வளர்ச்சி 8% ஆக இருந்தது. முழு ஆண்டில் அது 5% ஆக இருக்கும். இது மோசமான வளர்ச்சியல்ல. இதன் மூலம் எம்மிடம் பொருளாதார ஸ்திரத்தன்மை உள்ளது.அதேபோல் குறைந்த வட்டி வீதமும் ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையாமல் தடுக்கின்றது. நாங்கள் ஏற்கனவே பெரும்பாலான வர்த்தகங்களைப் பார்த்துள்ளோம். குறிப்பாக பெரிய நிறுவனங்கள் வளர்ந்துள்ளன. மேலும் சிறு வணிகங்களும் நன்றாக செயற்பட முடிந்தால் அப்போது நாம் முழுமையாக மீட்சியடைவதற்கான பாதையில் செல்வோம் என்று நினைக்கிறேன்.

Q இந்த இலக்கை அடைவதற்கு அரசாங்கத்தின் உபாயம் என்ன?

பதில்:பல உள்ளன.ஒன்று நம்பிக்கையையும் ஸ்திரத்தன்மையையும் உருவாக்குவதாகும். மற்றொன்று, தற்போதைய சூழ்நிலையை தெளிவாகவும் கருக்கமாகவும் கையாள்வதன் மூலம் மக்களுக்கு நம்பிக்கை கிடைக்கும். இவை இரண்டையும் இப்போது செய்து வருகிறோம். உங்களுக்குத் தெரியும், மத்திய வங்கி ஆறு மாத திட்டத்தை வகுத்துள்ளது. அதில் எங்கள் இலக்குகள் மற்றும் நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பது தெளிவாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது . 2022 பட்ஜெட் முன்மொழிவுகளில் அரசாங்கம் அதை வெளிப்படுத்தும். இந்த ஏற்பாடுகள் அனைத்தும் பங்குதாரர்களால், சம்பந்தப்பட்டவர்களால் புரிந்து கொள்ளப்பட்டவுடன், அனைவரும் அதைச் செய்வதில் உறுதிப்பாட்டுடன் இருப்பார்கள் என்பதால், மீட்சியடைதல் இன்னும் வேகமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

Q பொருளாதாரத்தில் மீண்டும் எழுச்சி பெற்று மக்கள் எப்போது நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள்?

பதில்: கற்றுலாவும் அதன் ஆதரவை அளித்தவுடன் மீண்டும் எழுச்சி பெறத் தொடங்கும் என்று நான் நினைக்கிறேன்.ஏனென்றால் சுமார் 500,000 மக்கள் கற்றுலாவை அவர்களின் முக்கிய வாழ்வாதாரமாக நம்பியுள்ளனர். அதேநேரத்தில், ஏனைய வருமானம் மற்றும் அனுகூலங்களைத் தவிர, கற்றுலாத் துறையில் இருந்து மறைமுகமாக சம்பாதிப்பவர்கள் பலர் உள்ளனர். கற்றுலாவும் தேவையான அந்நியச் செலாவணியை வழங்குகிறது. எனவே, அந்த ஆதரவு வழங்கப்பட்டவுடன், மீள் எழுச்சி மிகவும் தெளிவானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதைத்தான் நாங்கள் மிக விரைவாக செய்வதற்கு முயற்சிக்கிறோம். இதனால் நாடு மீண்டும் நிறப்பதற்கு தயாராக உள்ளது.

Q சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 787 மில்லியன் அமெரிக்க டொலர்கள், பரிவர்த்தனை ஏற்பாடாக பங்களாதேஷ் வங்கியிடமிருந்து 150 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 2 பில்லியன் ரென் மின் பி பெறுமதியான 308 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வசதி மூலம் மொத்தம் 1.2 பில்லியன் டொலருக்கும் மேற்பட்ட தொகையானது ரூபாயின் மதிப்பை உயர்த்தத் தவறிவிட்டது. ஏன்?

பதில்:கற்றுலா நடவடிக்கைகளின் வீழ்ச்சியால் நாம் அனுபவிக்கும் அந்நிய செலாவணி வருவாயின் இழப்பை உண்மையில் ஈடுசெய்வதற்கு இந்த வரவுகள் முக்கியமானவை. அதனால்தான் ரூபாயின் மதிப்பை உயர்த்துவதற்கு அது அதிக பங்களிப்பை கொண்டிருக்கவில்லை. ஆனால் காலப்போக்கில் கற்றுலா வேகம் பெற்றவுடன், ரூபாயின் மதிப்பு அதிகரிப்பதைக் காண்போம். ஏனெனில் தற்போது ரூபாயின் மதிப்பு அதிகரிப்பதற்கு அதிகளவிற்கு இடம் உள்ளது. இறக்குமதியின் கட்டுப்பாடுகளில் சமநிலையை பேணவும் இது எங்களுக்கு உதவியது.

Q கொவிட் 19 தொற்றுநோயானது , தொழில், கற்றுலா, விவசாயம், ஆடை மற்றும் ஆடை ஏற்றுமதி, சுகாதாரம், கல்வி உட்பட பலவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலிருந்தும் முன்னொருபோதும் இல்லாத வகையில் ஏற்றுமதி , வருவாய் ஆகியவற்றை கடுமையாகப் பாதித்துள்ளது. பல சர்வதேச பொருளாதார நிபுணர்களால் உலகப் பொருளாதாரம் பற்றிய முன்னறிவிப்பு என்னவென்றால், தொற்றுநோய் அடங்கியவுடன் உலகப் பொருளாதாரம் விரைவான முன்னேற்றத்தை அடையுமென்பதாகும் . இந்த சவாலை எதிர்கொள்ள இலங்கையின் தயார் நிலை எவ்வாறு உள்ளது?

பதில்: தொற்றுநோய் பரவினாலும் கூட, இலங்கை அதன் ஏற்றுமதி, பணம் அனுப்புதல் மற்றும் பல துறைகள் தொடர்பாக நியாயமான முறையில் சிறப்பாக செயற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கொவிட் 19 இன் விளைவாக பல இடைவெளிகள் திறக்கப்பட்டுள்ளன மற்றும் பல துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் கொவிட் தாக்கம் குறைக்கப்பட்டவுடன் பல நாடுகள் தங்கள் பொருளாதாரத்தில் கூர்மையான மற்றும் விரைவான எழுச்சியை அனுபவிக்க முடியும். இலங்கையும் வேறுபட்டதாக இருக்காது. கற்றுலா வளர்ச்சியடைந்தவுடன், ஏற்கனவே கட்டமைப்பு இருப்பதால், மகத்தான முன்னேற்றத்தைக் காண்போம் என்று தனிப்பட்ட முறையில் நான் நம்புகிறேன். கற்றுலாத் தலங்கள் , ஹோட்டல்கள், வாகனங்கள், உள்கட்டமைப்பு வழிகாட்டிகள் மற்றும் அனைத்தும் உள்ளன. கற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கியவுடன், அவர்களுக்கு சேவையை வழங்குவதற்கான ஆற்றல் எங்களிடம் உள்ளது. அதாவது, பெருமளவிலான அந்நியச் செலாவணி வருவது உடனடியாகஇடம்பெறும். அதற்காக நாம் விடாமுயற்சியுடன் செயற்பட வேண்டும்.

Q பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த பரிவர்த்தனைகளின் மதிப்பைப் பொறுத்து எந்தவொரு நாட்டிலும் பணம் அச்சிடப்படுகிறது. மொத்த பண விநியோகத்தின் அதிகரிப்புக்கு ஏற்றவாறு பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சியை எதிர்கொள்ள நாடுகள் பணத்தை அச்சிடுவது பொதுவானது. பொருளாதாரத்தின் அடிப்படைகளில் ஒன்று, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு இணையாக பணம் அச்சிடுவது அவசியம். 2020/2021 காலப்பகுதியில் மட்டும் அரசாங்கம் 2 டிரில்லியன் ரூபாவுக்கு மேல் அரச செலவினங்களுக்கு நிதியளித்துள்ளது. இது அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு ஆகியவற்றின் கடுமையான அதிகரிப்புக்கு பங்களிப்பு செலுத்தியுள்ளது . உங்கள் கருத்து என்ன?

பதில்: பொருளாதாரத்தின் அடிப்படைத் தன்மைகளை சரியாகச் சொல்லியிருக்கிறீர்கள். நான் அதை மறுக்கவில்லை. ஆனால் இந்த அடிப்படைகள் சில அனுமானங்களின் அடிப்படையிலும் உள்ளன. அந்த இயல்பையும் நாம் அனுபவிக்கிறோம். ஆனால் இன்று அந்த இயல்புநிலையை நாம் அனுபவிக்கவில்லை. அதனால்தான் தற்போதைய அசாதாரண சூழ்நிலையை சமாளிக்க சில புதிய நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கவேண்டியுள்ளது.பல நாடுகளும் அதனை மேற்கொண்டிருந்தன. அதற்கு இலங்கை விதிவிலக்கல்ல. மத்திய வங்கியின் பிரத்தியேகமானதும் வழமையானதுமான பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வுகாண வேண்டியிருந்தது. நீங்கள் பொதுவானபேச்சில் 'பணம் அச்சிடுதல்' என்று கூறுகிறீர்கள். ஆனால் அதிலிருந்தும் பின்வாங்க வேண்டிய நேரத்தில் நாம் அதைச் செய்ய வேண்டிய நிலையில் இருப்போம் என்பதை முதலில் உணர்ந்துகொள்வதுதான் முக்கியம். இது ஒரு சத்திரசிகிச்சை நிபுணரால் செய்யப்பட வேண்டிய ஒரு தீவிர சத்திர சிகிச்சை போன்றது என்று நான் நினைக்கிறேன். சத்திர சிகிச்சை நிபுணர் வெட்டுவார், எப்படி மீண்டும் தைப்பது என்பது அவருக்குத் தெரியும். உங்களை வெட்டுவதற்கு மற்றவர்களை அனுமதித்தால், அவர்கள் வெட்டுவார்கள். ஆனால் உங்களை எப்படி தைப்பது என்று அவருக்குத் தெரியாது. பின்னர் நீங்கள் கடுமையான சிக்கலில் இருப்பீர்கள். எனவே, சத்திரசிகிச்சை நிபுணரால் சத்திர சிகிச்சை செய்யப்படுகிறது , அதை எந்த நேரத்தில் பின்வாங்குவது என்பது அறுவை சிகிச்சை நிபுணருக்குத் தெரியும். இதனால் எந்தவித அசம்பாவித நிலையும் ஏற்படாது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஆனால் நாங்கள் கவனமாக இருப்போம், அடுத்த சில மாதங்களில் இது கையாளப்படும் என்பதை உறுதிப்படுத்துவோம் .

Q சீனி மீதான இறக்குமதி வரி இந்த ஆண்டு தொடக்கத்தில் ஒரு கிலோவுக்கு 50 ரூபாயிலிருந்து 25 சதத்தால் குறைக்கப்பட்டது என்பது உறுதியான உண்மை. இது ஒரு சில ஆட்சி நட்புவர்த்தகர்களுக்கு மட்டுமே பயனளித்தது. வரி குறைப்புகளால் நிறைசேரிக்கு ஒரே நேரத்தில் 15.9 பில்லியன் ரூபா இழப்பு பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளபோது ஏற்பட்டது . இந்த நடவடிக்கை இந்தசீனி முதலாளிகளால் சீனி விலையை மிகவும் நியாயமற்ற அளவிற்கு பதுக்கிவைப்பதற்கும்உயர்த்துவதற்கும் பங்களித்துள்ளது. கொள்ளையர்களுக்கு எதிராக அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏன்?

பதில்;நெருக்கடியான நேரத்தில், பல வர்த்தகர்கள் தாங்கள் செய்ய வேண்டியதை விட கூடுதல் பணம் சம்பாதிக்க முயற்சி செய்கிறார்கள். இது சர்க்கரை சீனி வியாபாரிகளிடம் மட்டுமல்ல, கிராமத்தில் உள்ள சிறு முதலாளிகளிடமும் உள்ளதென்பது உண்மை. அவர்கள் இயற்கையாகவே சூழ்நிலையை பயன்படுத்தி வேகமாகப் பணம் சம்பாதிக்கிறார்கள். இது ஒரு உலகளாவிய நடவடிக்கை என்பதால் இது மிகப்பெரிய உலக சந்தையின் அனுபவம் வாய்ந்தது. பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படும் போது குறிப்பிட்ட சிலர் பணம் சம்பாதிக்கின்றனர். உலக சந்தையில் சீனி விலை அதிகரித்து வருவதால் நுகர்வோருக்கு நன்மை பயக்கும் வகையில் மனிதாபிமான நடவடிக்கையாக சர்க்கரை, சீனி மீதான வரியை குறைக்கும் அரசின் முயற்சி. துரதிர்ஷ்டவசமாக, சில பெரிய வர்த்தகர்களால் கூடுதல் இலாபம் ஈட்டுவதற்காக உள்நாட்டு சந்தையில் சீனிப் பற்றாக்குறையை உருவாக்க பயன்படுத்தப்பட்டது. ஆனால் சீனி இறக்குமதி மீதான வரியை குறைக்க அரசு எடுத்த நடவடிக்கை எந்த ஒரு குறிப்பிட்ட வர்த்தகருக்கும் ஆதரவாக வடிவமைக்கப்படவில்லை. சீனி இறக்குமதி மீதான வரி குறைப்பு என்பது மக்களுக்கு நன்மை பயக்கும் ஒரு மனிதாபிமான நடவடிக்கையாகும். வரிக் குறைப்பினால் மக்களுக்கு உண்மையில் பலன் இல்லை என்று யாராவது சொன்னால், அரசாங்கம் மீண்டும் சீனிக்கு வரி விதித்தால், நாளை ஒரு கிலோ சீனி குறைந்தபட்சம் ரூ. 50 அல்லது அதற்கு மேல் அதிகரிக்கும் . அதனால்தான் வரிக் குறைப்பு அல்லது விலைக் குறைப்பு காலங்களில், அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அதன் பலன் நுகர்வோருக்கு விரைவாகக் கிடைப்பதில்லை . எனினும், இன்று வரிகள் அதிகரிக்கப்பட்டால் அது நாம் எதிர்பார்ப்பதை விட வேகமாக நுகர்வோருக்குச் சென்றுவிடும். எனவே இந்த விடயங்களில் இந்த கடினமான சமநிலையை நாம் பராமரிக்க பேண வேண்டும். ஆனால், நிறைசேரிக்கு ரூ.15.9 பில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கூறுவது முற்றிலும் சரியாக இருக்காது. முக்கிய காரணம்,நிறைசேரி சில சமயங்களில் வரிகளை குறைக்க முடிவெடுக்கலாம், இல்லையெனில் மக்கள் அதிகம் பாதிக்கப்படலாம். கடந்த அரசாங்கம் வரிகளை அதிகரித்து மக்கள் மீது கமையை ஏற்றியதைப் போன்றல்லாமல் அரசாங்கம் எடுத்த ஒரு உணர்வுபூர்வமான முடிவு இதுவாகும்.

Q வரி குறைப்பு சராசரி நுகர்வோருக்கு உதவியிருக்கிறது என்பது உங்கள் கருத்து. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வரி குறைப்பு இல்லை என்றால், உள்நாட்டு சந்தையில் சீனியின் விலை இன்றைய விலையை விட அதிகமாக இருந்திருக்கும்?

பதில்: முற்றிலும், நான் அந்த கருத்தை எடுத்துக்கொள்கிறேன். ஏனெனில் அது மிகவும் வெளிப்படையானது. சீனி இறக்குமதிக்கான வரியை அரசு உயர்த்தினால், ஒரே இரவில் சீனி விலை உயரும். வரி குறைப்பால் இது தடுக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் பிரதான சந்தேக நபரான அர்ஜுனா மகேந்திரன் சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றதற்கு எதிராக அரசாங்கம் அநாகரீகமான முறையில் மெதுவாக நடவடிக்கை எடுத்து வருகிறது. 2015 இல் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக அவரைத் தேர்ந்தெடுத்து, மத்திய வங்கியை கொள்ளையடிக்க அந்த நபருக்கு உதவிய அரசியல்வாதி இன்னும் தலைமறைவாக இருக்கிறார். அவர்களுக்கு எதிராக விரைவான சட்ட நடவடிக்கை எடுப்பது என்பது ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் வாக்குறுதியாகும். அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரிவினரும் வங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட சந்தேக நபர்களும் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் உதவுவதற்காக ஒப்பந்தம் போட்டுள்ளனர் என்று நம்புவதற்கு இந்நாட்டு மக்களுக்கு முழு உரிமையுண்டு. நீங்கள் என்ன சொல்ல வேண்டியுள்ளது ?

பதில்:இவர்களை கைது செய்வதற்கும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் சட்டத்தின் செயல்முறை விரைவாக இல்லாததால் நான் தனிப்பட்ட முறையில் ஏமாற்றமடைகிறேன். ஆனால் எமது மக்கள் நாட்டின் சட்டத்தை பின்பற்ற வேண்டும் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

(05 ஆம் பக்கம் பார்க்க...)

அடுத்த கட்ட கொரோனா அலையை தடுப்பதற்கு அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

-அரச அதிபர் மகேசன் வேண்டுகோள்-

நாட்டில் ஏற்பட வுள்ள அடுத்த கட்ட கொரோனா அலையை தடுப்பதற்கு அனைவரும் தத்தமது பொறுப்புகளை உணர்ந்து செயற்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற மாவட்ட கொவிட் செயலணி மற்றும் டெங்கு ஒழிப்பு, அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ் .மாவட்டத்தின் கொவிட் நிலைமை கட்டுப்பாட்டில் உள்ள போதும் புதியதொரு அலை ஏற்படுவதை தடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

நீண்ட நாட்களுக்கு பின்னர் மாவட்ட செயலகத்தில் பலரின் பங்கேற்புடன் கொவிட் செயலணிக் கூட்டத்தை நடத்துகிறோம்.

சுகாதார பிரிவின் புதி வழிகாட்டல்களுக்கு ஏற்ற வகையில் பாடசாலைகள், அலுவலகங்கள், பல்கலைக் கழகங்கள்,மத வழிபாட்டிடங்கள் , வணிக நிலையங்கள், மற்றும் வைபவங்களை நடத்த வேண்டும்.

மேலும் கடந்த காலங்களில்டெங்கு நோயின் தாக்கத்தை விட தற்போது குறைவாகவே அறிக்கையிடப்பட்டுள்ள நிலையில் மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகள்தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

டெங்கு நோய் தொடர்பில் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம மட்டங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தரப்பினரும் குறித்த செயற்பாடுகளுக்கு தங்களாலான பணிகளை திறம்பட செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கும் நன்றி சொல்ல வேண்டும்.

ஆகவே கொரோனா மற்றும் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அனைவரனதும் ஒத்துழைப்பு அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன்,யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன், 51வது பிரிவின் இராணுவத்தளபதி சந்தன விக்ரமசிங்க, யாழ் போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர், முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், உள்ளூராட்சி சபைத் தலைவர்கள்,சுகாதார அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(75)

வரவு செலவு திட்டம் 18 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் 2 ஆயிரத்து 22 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் 18 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.மேற்கு - சுழிபுரம் பிரதேச சபையின் வரவு செலவுத்திட்ட கூட்டமானது தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் தலைமையில் நேற்று காலை சபையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

தவிசாளரால் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதங்கள் இடம்பெற்றது.

இதனையடுத்து வரவு செலவு தீட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது 18 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

25 உறுப்பினர்களை கொண்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 9 உறுப்பினர்களும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 5 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்களும் மற்றும் சுயேட்சை குழுவின் 2 உறுப்பினர்கள் உள்ளடங்களாக 19 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் ஒரு உறுப்பினர் வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வக்களித்த அதே வேளை, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் 4 உறுப்பினர்களும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு உறுப்பினரும் சபை அமர்வில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(40)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூஜை

யாழ்ப்பாணம் -குப்பிழான் சொக்கவளவு அருள்மிகு அங்கயற்கண்ணி உடனான திருவாலவாயார் திருக்கோவிலில் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூஜை நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சைவப்புலவர் பொன். சந்திரவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் மங்களவிளக்கேற்றல் , நந்திக்கொடியேற்றல், குருபூஜை, கடவுள் வாழ்த்து, வரவேற்புரை, ஆசியுரை இடம்பெற்று அதனையடுத்து சிறப்புச்சொற்பொழிவினைச் சைவசின்மயர் சிவநெறிச்செம்மல் நித்திய பாபுதரன் நால்வர் காட்டிய வாழ்வியல் என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். அதனைத்தொடர்ந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். ஜெயராசா அருள்தாஸின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவடையும்.

பூநகரி பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் தோற்கடிப்பு

பூநகரி பிரதேச சபையின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலேயே தோற்கடிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட வாக்கெடுப்பு நேற்று பிரதேச சபையில் இடம்பெற்றது. இதன்போது ஆதரவாக 8 வாக்குகளும், எதிராக 10 வாக்குகளும் குறித்த வரவு செலவு திட்டத்திற்கு கிடைத்திருந்த நிலையில் வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

வரவு செலவு திட்டத்துடனான பிரதேச சபை அமர்வு பூநகரி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை தலைமையில் 10 மணிக்கு ஆரம்பமானது. இதன்போது வரவு செலவு திட்டம் சபை வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

குறித்த வரவு செலவு திட்டத்திற்கு 11 பேர் கொண்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர்களில் 10 பேரும் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரும் எதிராக வாக்களித்தனர்.

தவிசாளர் மற்றும் சுதந்திர கட்சி உறுப்பினர்கள் இருவரும், ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரும், சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் நால்வரும், ஈபிடிபி கட்சி உறுப்பினர் ஒருவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இதனால் குறித்த வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பினர் அனைத்து வட்டாரங்களிலும் வெற்றி பெற்று 11 ஆசனங்களுடன் ஆட்சி அமைத்தனர். தவிசாளரை பதவி விலகுமாறு பல தடவைகள் ஆளும் தரப்பினரால் கோரிக்கை விடப்பட்ட நிலையில் நேற்றைய தினம் குறித்த வரவு செலவு திட்டம் ஆளும் தரப்பினராலேயே தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(55)

ஊடகவியலாளர்களுக்கு ஒளிப்படக்கருவி வழங்கி வைப்பு

USAID நிறுவனத்தின் நிதி அனுசரனையுடன், கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் சமூக ஒற்றுமை மற்றும் நல்லினக்கச் செயற்பாடு திட்டத்தின் கீழ் பாகுபாடற்ற இயங்குநிலை ஊடக செயற்பாடுகளை ஊக்குவித்தல் செயற்றிட்டத்தினுடாக முல்லைத்தீவு ஊடக அமைய ஊடகவியலாளர்களுக்கான ஒளிப்படக் கருவி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10மணிளயவில் மாவட்ட செயலக பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இந் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு குறித்த ஒளிப்படக் கருவிகளை வழங்கி வைத்தார். அமெரிக்க வாழ் மக்களின் வரிப்பணத்தில் செயற்படுத்தப்படும் இத் திட்டத்தினூடாக பத்து ஊடகவியலாளர்களுக்கு ஒளிப்பட கருவியும், முல்லைத்தீவு ஊடக அமையத்திற்கு ஒரு கணனித்தொகுதியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊடகவியலாளர்களுக்கான தொழில்வான்மை விருத்தி சார்ந்த இருகட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டபின் குறித்த உபகரணம் வழங்கப்பட்டுள்ளது. இதன்பின்பும் இருகட்ட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் USAID நிறுவன திட்ட பணிப்பாளர், கிராமிய அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர், உதவி மாவட்ட செயலாளர், USAID நிறுவன உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். பாகுபாடற்ற இயங்குநிலை ஊடகசெயற்பாடுகளை ஊக்குவித்தல் என்ற தொனிப்பொருளில் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சி வகுப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(15)

மரண அறிவித்தல்



பிறப்பு 13 * 11 * 1952

இறப்பு 22 * 11 * 2021

சிவலிங்கம் சிவனேஸ்வரன் (பவா)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைச்சேர்ந்த சிவலிங்கம் சிவனேஸ்வரன் அவர்கள் கடந்த (22.11.2021) திங்கட்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் சிவஞானம் தம்பதியரின் அன்பு மகனும் சிவயோகம், சிவராணி, சிவதாசன், சிவரஞ்சன், சிவசக்தி, சிவரஜனி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிற்குணானந்தன், நந்தினி, தயானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரியங்கா, ஜெனகன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2021) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காடா கடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

0212242201
0775178040

தகவல்,
குடும்பத்தினர்.

உள்சார்...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாம் சட்டத்தை பின்பற்றும் போது, சில சமயங்களில் சட்டங்கள் தாமதமானது நீதியின் கழுகமான நிர்வாகத்திற்கு தடையாக இருப்பதைக் காணலாம். நீதி விரைவாக வழங்கப்படுவதைக் காண விரும்புவதால், சட்டத்தைப் பின்பற்றும்போது சட்டங்கள் தாமதங்களை நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும். அநிர்ஷ்டவசமாக அல்லது துரதிர்ஷ்டவசமாக, நாங்கள் சட்டத்தின் ஆட்சிக்கு கட்டுப்படும் நாட் டில்உள்ளோம் . ஒருவர் குற்றம் செய்தவர் என்று நன்கு அறியப்பட்டிருந்தாலும், அவர் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க சட்டத்தை நடைமுறைப்படுத்த அவருக்கு சுதந்திரம் உள்ளது. எனவே இந்த சம்பவத்தில் அர்ஜுனா மகேந்திரன் தலைமறைவாகியுள்ளார். அவரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். ஆனால் அவர் அங்கு இல்லாமல் கூட அவர் மீதான வழக்குகள் நிலுவையில் இருப்பதாக நான் நம்புகிறேன். ஏனைய சந்தேகநபர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே நியாயம் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், ஆனால் நீங்கள் சொன்னது போல், இந்த முழு நடவடிக்கையின் மூளையாக இருந்தவரை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்று நான் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். உண்மையில் நான் "The Great Bond Scam Cover up" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதியுள்ளேன். ஏனென்றால், இந்த முழு அத்தியாயத்திலும் ஒரு விரிவான மற்றும் மிக உயர்ந்த அளவில் மூடிமறைப்பு உள்ளது என்று நான் நம்புகிறேன், இந்த கொடூரமான குற்றத்திற்கு முழுமையான நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக மீண்டும் ஒருமுறைஆராய்ந்து பார்க்க வேண்டும் மற்றும் சரிபார்க்க வேண்டும்.

கேள்வி:அர்ஜுனா மகேந்திரனை கைது செய்து இலங்கைக்கு அழைத்து வருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா?

பதில்:சட்ட அமு லாக்க அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிசார் ஆகியோர் இதுதொடர்பாக பணியாற்றி வருகின்றனர் என நான் நம்புகிறேன் ஆனால் அவர்கள் இந்த விடயத்தில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து நான் இரகசியத்தை கொண்டிருக்கவில்லை. ஆனால், இந்த நாட்டில் எவரொருவர் தமது செயலால் நாட்டைப் பெரும் ஆபத்தில் ஆழ்த்தினார்களோ, அவர்களும் தங்கள் தவறுக்குப் பொறுப்புகூறுமாறு கேட்கப்படுவார்கள் என்பதில் எனக்கும் நம்பிக்கையுள்ளது.

கேள்வி;2020 முதல் இலங்கையைப் பாதித்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிகழ்வுகளை வரிசைப்படுத்தும்போது சுதந்திரத்திற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த மிகவும் துரதிர்ஷ்டவசமான அரசாங்கங்களில் இந்த அரசாங்கம் ஒன்றாகும் என்று தெரிகிறது. இ. நா. மனித உரிமைகள் பேரவையின் மார்ச் அமர்வுகளில் அதிக பெரும்பான்மையுடன் 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசாங்கம் தமது நிலைப்பாட்டை பின்பற்றாவிட்டால், ஜி.எஸ்.பி + சலுகையை திரும்பப் பெறுவதாக ஐரோப்பிய ஒன்றியம் அச்சுறுத்தியுள்ளது. அதன் பிறகு கோவிட் 19 தொற்றுநோய் வடிவத்தில் இந்த முன்னொருபோது மி ல்லாத மற்றும் மிகவும் தீங்கு விளைவிக்கும் சுகாதார அச்சுறுத்தல் வந்தது, இது முழு நாட்டையும் அனைத்து முனைகளிலிருந்தும் பேரழிவிற்கு உட்படுத்தியது. அந்நிய நேரடி முதலீடு குறைந்துள்ளது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு வாக்களித்த பெரும்பான்மையான வாக்காளர்கள், மகா சங்கத்தினர், ஏனைய மத குருமார்கள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் உட்பட. சமூகம் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழந்துள்ளது, இது பொதுவோட்டத்திலும் சமூக ஊடகங்களிலும் தெளிவாக வெளிப்படுகிறது. சந்தை, அலுவலகம், பணியிடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் இருக்கும்போது பொதுமக்கள் தங்கள் வழக்கமான உரையாடல்களில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கின்றனர். எப்படி, ஏன்? இந்த ஆரோக்கியமற்ற சூழலை சீர் செய்ய அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

பதில்;ஆம், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்று கூறுவது உண்மைதான். . அது உண்மை. அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அரசாங்கம் இந்தச் சவால்களைக் கையாண்ட விதத்தைப் பார்த்தால், இந்தச் சவால்கள் அனைத்தையும் மீறி, பொருளாதாரத்தையும் நாட்டையும் முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்வதற்காக இந்தச் சவால்கள் அனைத்திற்கும் தெளிவான எதிர்வினை இருந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஐநா மனித உரிமைகள் பேரவையின் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட 30 வருட பிரிவினைவாத யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டஇராணுவத்தினரையும், எமது மக்களையும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் உறுதியாகக் கடைப்பிடித்துள்ளது. அது நல்ல விட யம்தான். அதே சமயம், ஜி எஸ் பி + விலக்கு போன்ற மேலும் புதிய சவால்களை அது ஏற்படுத்தினால், நாங்கள் அதை தெளிவாக்கியுள்ளோம்.நாட்டின் ஒட்டுமொத்த ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை வேறு தரப்பினரிடமிருந்து சில நன்மைகளைப் பெறுவதற்காக சமரசம் செய்ய முடியாது. அப்படியானால், நாட்டின் இடர் முகாமையாளர் என்ற வகையில், அத்தகைய நடவடிக்கைகளின் தாக்கம் குறைக்கப்படுவதை உறுதிசெய்ய நானே எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வேன்.

மக்களை எப்படி திருப்திப்படுத்துவது என்பதுதான் இரண்டாம் பாகம். முக்கியமாக தொற்றுநோயின் விளைவாக மக்களுக்கு சவால்கள் உள்ளன, இது இலங்கை மக்கள் மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள மக்களும் அனுபவித்த ஒன்று. மேற்குல க்க , வளர்ந்த அல்லதுசெல்வந்த நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகளிலும் பாரிய எதிர்வினைகள் மற்றும் கிளர்ச்சிகளை நீங்கள் பார்த்திருக்கலாம். எனவே, நாம் இப்போது கவனம் செலுத்த வேண்டியது என்னவென்றால், அடுத்த இரண்டு ஆண்டுகளில் அந்த ஸ்திரத்தன்மையை எவ்வாறு கொண்டு வர முடியும், புதிய சவால்கள் எதுவுமின்றி மக்கள் தங்கள் அலுவல்களை மேற்கொள்வதை சாத்தியமாக்குகிறது.. கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர்களின் வணிகத்திற்காக 4,000பில்லியன்ரூபாஅளவுக்கு தடை விதித்துள்ளோம் சௌபாக்யா கடன்கள் ரூ. 179 பில்லியன். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏதாவது ஒரு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. சமூகத்தின் நலிந்த பிரிவினரிடையே உள்ள குடும்பங்களுக்கு ரூ. 5,000 மூன்று முறை வழங்கப்பட்டது . கோவிட் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது. தடுப்பூசிக்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மக்களுக்கு அடிப்படை, அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்காக செய்யப்பட்டுள்ளன. சில சமயங்களில், மக்கள் ஏமாற்றம் அடைந்தால் உடனடியாக வருத்தம் அடையலாம், ஆனால் இந்த அரசாங்கம் மற்ற எந்த அரசாங்கமும் செய்ய முடியாத அளவுக்கு சிறப்பாகச் செய்துள்ளது என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

எனது தொழில் முயற்சிக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தடை

-பெண் முதலீட்டாளர் மத்திய வங்கி ஆளுநர் முன் ஆதங்கம்-

எனது நடுத்தர தொழில் முயற்சியை விரைவாக மேற்கொள்வதற்கு வவுனியா மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தடையாக உள்ளதாக பெண் முதலீட்டாளர் ஒருவர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் முன்னிலையில் தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற வடக்கு மாகாணத்தின் சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நான் ஒரு பட்டதாரியாக இருந்தும் அரச தொழிலை நிறுத்திவிட்டு வாழ்வாதாரத்தை எதிர்பார்த்திருக்கும் பெண்களுக்கு தொழில் வழங்க வேண்டும் எனக் கருதி சுய தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பித்தேன்.

சுமார் 50 பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி வரும் நிலையில் அவர்களில் பெரும்பாலானவர்கள் சமுர்த்தி பெறும் பெண்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் வவுனியா மாவட்டத்திலுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் குழுக் கூட்டம், சிரமதானம் மற்றும் என அழைப்பதால் எனது தொழில் முயற்சிக்கு பாதிப்பு ஏற்படுவதாக சுட்டிக்காட்டினார்.

ஆடை வடிவமைப்பு துறையில் பெண்களை ஈடுபடுத்தி வருவதால் எல்லோரும் ஒரே தடவையில் குறித்த தொழிலை மேற்கொள்ள வேண்டும் .

இல்லாவிட்டால் குறித்த தொழில்துறையை விவேகமாக செய்துமுடிக்க முடியாது. மேலும் எனது தொழில் முயற்சியை மேலும் வளர்த்துக் கொள்வதற்காக போதிய பண வசதிகள் இல்லை.

பலதடவைகள் அதிகாரிகளிடம் கேட்டேன் எனக்கு ஒரு அரச காணியில் பொருட்களை சேமித்து வைப்பதற்கான களஞ்சியம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக சிறிய நிலப்பகுதி கேட்டேன் கிடைக்கவில்லை.

சொந்தமாக காணி கொள்வனவு செய்ய பணம் இல்லாவிட்டாலும் அரசின் நிலத்திற்கு குத்தகை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

ஆகவே எனது தொழில்துறையை மேலும் வளர்ச்சி அடையச் செய்வதற்கு வட மாகாணத்தின் ஆளுநர் தடைகளை நீக்கி தருவாராயின் மேலும் 50 பெண்களுக்கு தொழில் வழங்க நான் தயாராக இருக்கிறேன் என்றார். (75)

வடமாகாண மரநடுகை மாதம்

கார்த்திகை 01-30, 2021

"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை."

சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)

உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் கொவிட் 19 பேரிடர் காரணமாக பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகள் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

RYTHM நிறுவனத்தின் நிதி அனுசரணையிலும், CHA (Consortium of Humanitarian Agencies) நிறுவனத்தின் செயற்படுத்தலிலும் அத்தியாவசியமான உலருணவுப்பொருட்கள் அடங்கியதாக ஒருவருக்கு ரூபா 4,290 பெறுமதியான உலருணவுப் பொருட்களே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந், கிராம சேவகர் - நிர்வாகம், RYTHM மற்றும் CHA நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் குறித்த பயனாளிகள் கலந்துகொண்டிருந்தனர்.

மாணவர்கள் நலன்கருதி தனியார் பேருந்து சேவையை ஆரம்பிக்க கோரிக்கை

முல்லைத்தீவு -மாந்தை கிழக்கின் மாணவர்களை பாடசாலையில் இருந்து வீடு திரும்புவதற்கான தனியார் பேருந்து சேவையினை நேற்று முன்தினம் ஆரம்பிப்பது எனத் தெரிவிக்கப்பட்ட நிலையிலும் குறித்த பேருந்து சேவை இடம் பெறவில்லை என மாந்தை கிழக்கு பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

காலை 6.40 மணிக்கு பனங்காமம் சந்தியில் இருந்து பயணிக்கும் தனியார் பேருந்து பாண்டியன்குளம், செல்வபுரம், குமாரசாமிபுரம், பாலிநகர், மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்களை ஏற்றி யவாறு பயணிக்கும். பாடசாலை முடிந்தவுடன் இப்பேருந்து சேவை இடம் பெறுவதில்லை. இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து சங்கத் தலைவர் தெரிவிக்கும் போது நேற்று முன்தினம் முதல் மாணவர்கள் வீடு திரும்பும் வகையில் பேருந்து சேவை நடாத்தப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால் பேருந்தினை எதிர்பார்த்திருந்த மாணவர்கள் ஏமாற்றம் அடைந்ததுடன் பெற்றோர்களின் துணையுடன் வீடுகளுக்குத் திரும்பினர். மாந்தை கிழக்கிற்கான தனியார் பேருந்து சேவைகள் ஒழுங்காக நடைபெறாததன் காரணமாக பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீடுகளில் இருப்பதாக பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்று வரக் கூடிய வகையில் தனியார் பேருந்து சேவைகள் இடம் பெற வேண்டும் எனவும் இதற்கான நடவடிக்கையினை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (27)

நினைவு அஞ்சலி நிகழ்வு

வடமராட்சி ,யாழ்ப்பாணம் கல்வி வலயங்களின் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளரும், யாழ் மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரும், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் பிரதிச் செயலாளருமான அமரர் வே.தி.செல்வரட்ணத்தின் நினைவு அஞ்சலி நிகழ்வு இன்று காலை 10மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில், யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

குளங்கள் இணைக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை

முல்லைத்தீவின் படுகாட்டுக் குளத்தினை பழம்பாசிக் குளத்துடன் இணைக்க வேண்டும் என பழம்பாசி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. 10 அடி நீர் மட்டத்தினைக் கொண்ட படுகாட்டுக் குளத்தினை பழம்பாசிக் குளத்துடன் இணைக்க வேண்டும் என்பதே இக்கிராம பொது அமைப்புகளின் கோரிக்கையாகும். இதே வேளை தவசிக் குளத்தில் இருந்து விளாப்புக் குளத்திற்கு நீர் நிரப்ப வேண்டும். இவற்றினை செய்வதன் மூலம் 500 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் விவசாய முயற்சிகளை மேற்கொள்ள முடியும் என்றும் கடந்த அரசாங்கத்தில் இவ்வேலைத் திட்டத்தினை மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் மேற்படி வேலைத் திட்டங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இவ் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் பழம்பாசி கிராமத்தின் விவசாய முயற்சிகள் கூடுதலாக அபிவிருத்தி அடையும். இதற்கான வேலைத் திட்டங்களையும் தற்போதைய அரசு முன்னெடுத்து குளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

இது தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும் ஆராயப்பட்ட போதிலும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (27)

காட்டு யானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு- தேறாங்கண்டல்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கையினை நேற்று முன்தினம் காட்டுயானைகள அழித்து சேதமாக்கியுள்ளதாகவும் இதனால் தாங்கள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள தேறாங்கண்டல் குளத்தின் கீழ் இவ்வாண்டுக்கான கால போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு தேறாங்கண்டல் குளத்தின் கீழ் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நெற் செய்கையினை காட்டு யானைகள் அழித்துள்ளன.

இந்த பிரதேசத்தில் தினமும் இவ்வாறு காட்டுயானையின் தாக்கம் மற்றும் ஏனைய விலங்குகளின் தாக்கம் என்பன தொடர்ந்தும் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள விவசாயிகள் யானை வேலிகளை அமைத்து தருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றபோதும், இவ்வாறு யானை வேலிகள் அமைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். (55)

அறநெறி பாடசாலை ஆரம்பித்து வைப்பு

முல்லைத்தீவு -பழம்பாசி, 17ஆம் கட்டை கிராமத்தில் அறநெறி பாடசாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தங்கராசா நிசாந்தன் தலைமையில் இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

கருத்துரைகளை தாய்த் தமிழ் பேரவையின் தலைவர் சி.நாகேந்திரராசா, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சி.மோகனராசா, தண்டுவான் வித்தியாலயத்தின் அதிபர் கு.பஞ்சலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். அறநெறி மாணவர்களுக்கான கல்வி கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (27)

கொடிகாமம்-இராமாவில் ஆலய அறை உடைத்து திருட்டு

மீசாலை வடக்கு, கொடிகாமம் பகுதியில் அமைந்துள்ள இராமாவில் ஆலயத்தின் அறை ஒன்றினை உடைத்து நேற்று முன்தினம் அதிகாலை வேளையில் மூன்று இலட்சம் பணம் மற்றும் பொருட்கள் ஆகியன திருடப்பட்டுள்ளன.

அதிகாலை 12.30மணியளவில் ஆலய வளாகத்திற்குள் நுழைந்த இருவர் அங்கிருந்த அறை ஒன்றினை உடைத்து மூன்று இலட்சம் பணம்,அரிசி,தேங்காய் எண்ணெய் உள்ளிட்டவற்றை திருடிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (13)

பேருந்து சேவையினை மேற்கொள்ள வேண்டும்

-பொதுமக்கள் கோரிக்கை-

கிளிநொச்சி -முழங்காவில் வைத்தியசாலை வரையான பேருந்து சேவையினை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தின் ஜெயபுரம் வன்னேரிக்குளம் பல்லவராயன்கட்டு கிராஞ்சி வேரவில் போன்ற பின்தங்கிய கிராமங்களுக்கான மருத்துவ சேவையினை வழங்கும் பிரதான வைத்தியசாலையாக காணப்படும் முழங்காவில் ஆதார வைத்தியசாலை பூநகரி ,மன்னார் ஏ-32 வீதியின் முழங்காவில் சந்தியிலிருந்து 1.5 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி கிராமங்களில் இருந்து வைத்தியதேவைகளுக்காக வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் மாற்றுத்திறனாளிகள் முதியவர் கர்ப்பவதிகள் ஏ-32 பிரதான வீதியிலிருந்து கால் நடையாக அதிக பணத்தினை செலவு செய்து அல்லது முச்சக்கரவண்டிகளில் பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே வன்னேரிக்குளம் கிராஞ்சி வலைப்பாடு வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து செல்லும் உள்ளூர் பேருந்து சேவைகள் முழங்காவில் ஆதார வைத்தியசாலை வரை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொதுமக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (55)

குறுந்தூர போக்குவரத்துச் சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோரிக்கை

கிளிநொச்சி -ஆனையிறவு ,நாவல் கொட்டியான் மற்றும் உமையாள் புரம் ஆகிய பிரதேசங்களுக்கான குறுந்:தூர போக்குவரத்துச்சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சி, ஏ-9 வீதியின் திருமுறிகண்டி முதல் ஆனையிறவு வரைக்குமான பகுதிகளுக்கான குறுந்தூர பேருந்து சேவை நடத்தப்படவேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரியுள்ளனர்.

அதாவது திருமுறிகண்டி முதல் பரந்தன் வரைக்குமான குறுந்தூர சேவைகள் மாத்திரமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும், ஆனையிறவு நாவல் கொட்டியான் உமையாள் புரம் வரைக்குமான சேவைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இதனால் இந்தப்பிரதேச மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதாவது ஏ-9 வீதியூடாக வவுனியா யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றபோதும் உமையாள்புரம் ஆனையிறவு தட்டுவன்கொட்டி நாவல் கொட்டியான் பகுதியிலிருந்து செல்லும் பயணிகளை மேற்படி பேருந்துகள் ஏற்றிச்செல்வதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ள பிரதேச மக்கள் ஆனையிறவு பரந்தன் திருமுறிகண்டி வரைக்குமான பேருந்து சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (55)

பதவிக்காக அரசின் கால்களைக் கழுவி அரசியல் நடத்தவில்லை - டக்ளஸுக்கு சிறீதரன் பதிலடி

நான் அரசுக்கு வக்காளத்து வாங்கும் கையாள் அல்ல, பதவிக்காக ஆளுந்தரப்பின் கால்களை கழுவி பிழைக்கவும் வரவில்லை. எனவே தயவு செய்து என்பை பேசவிடுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சபையில் வைத்து பதிலடி கொடுத் தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.பாராளுமன்றத்தில் நேற்று சிறிதரன் எம்.பி.

உரையாற்றும்போது அவருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ம் இடையில் அவ்வப்போது வாக்கு வாதம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் சிறீதரன் எம்.பியின் உரையை குறுக்கீடு செய்தி அமைச்சர் டக்ளஸ்,

மஹிந்த ராஜபக்ச காலத்தில் வடக்கு, கிழக்கில் அபிவிருத்திகள் இடம் பெற்றுள்ளன என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். அதற்கு முன்ன ரும் நாம் செய்திருப்போம். ஆனால், நீங்கள் செய்யவிடவில்லை. பிரபாகரன் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டார். இது உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அல்லது நீங்கள் மறைக்கலாம்ி என்று குறிப்பிட்டார். இதற்குப் பதிலளிக்கையிலேயே பதவிகளுக்காகக் கால் கழுவிப் பிழைப்பதற்காகத் தான் அரசியல் நடத்தவில்லை என சிறீதரன் எம்.பி. குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உணவகத்தில் மரக்கறி கறி இல்லையாம்

நாட்டில் மரக்கறி தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வினால் நாடாளுமன்ற உணவகமும் பாதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளி யிட்டிருக்கின்றன.

நேற்றுமுன்தினம் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு வாக்கெடுப்பின் பின்னர், பாராளுமன்ற ஊழியர்களின் உணவு விடுதியிலும், ஊடகவி ய லாளர்களின் சிற்றுண்டிச்சாலையிலும் காய்கறிகள் எதுவும் சமைக்கப்டவில்லை.

காய்கறிகளின் அதிக விலைகள் மற்றும் சந்தையில் அவற்றுக்குத் தட்டு ப்பாடு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்றப் பேச்சா ளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் மதிய உணவுக்கு காய்கறிகளைத் சமைக்க முடி யாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் ஊடகவியலாளர் உணவகத்திலும் மதிய உணவாக சோறு, உரு ளைக் கிழங்கு பிரட்டல், தேங்காய் சம்பல், சோயா மீற், வெள்ளரிக்காய் சம்பல் மற்றும் ஈரபலாக்காய் மட்டுமே வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டு ஆட்சிக்கு வரலாம் என சஜித் பிரேமதாஸ நினைப்பது கனவு மட்டுமே

-அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு-

அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டு ஆட்சிக்கு வரலாம் என சஜித் பிரேமதாஸ நினைப்பது கனவுமட்டுமே ஆகும். என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரட்ண கூறியுள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தால், அரசாங்கத்தி ற்கு எதிராக மக்கள் முன்னோக்கி வருவது நிச்சயம் என அவர் தெரிவித்து ள்ளார். அரசாங்கம் குறித்து மக்கள் மத்தியில் மகிழ்ச்சியில்லை.

கட்சி என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதற்காக அனைத்தையும் அமைதியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதாகவும் செனவி ரட்ன தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர்கள் நாட்டின் நெருக்கடிக்குத் தீர்வு காண ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எதனையும் கலந்தாலோசிப்பதில்லை என்றாலும் நாட்டுக்கு நல்லது நடக்குமாயின் அது எனக்குப் பிரச்சினையில்லை.

அரசாங்கம் மீது மக்கள் மிகப் பெரிய அதிருப்தியில் இருக்கின்றனர். அரசா ங்கத்தின் மீது ஏற்பட்டுள்ள அதிருப்தியைப் பயன்படுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியால் மக்களிடம் சென்றடைய முடியாது.

தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டு ஆட்சிக்கு வரலாம் என சஜித் பிரேமதாஸ காணும் கனவு பகல் கனவு மாத்திரமே எனவும் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

30 மாணவர்களுக்கு கொரோனா தொற்று



தெனியாய கல்வி வலயத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் உட் பட 49 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

தெனியாய கல்வி வலயத்திலுள்ள 24 பாடசாலைகளில் இருந்து கடந்த 10 நாட்களில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானோரில் 30 பாடசாலை மாணவர்களும் மூன்று அதிபர்களும் அடங்குவதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிய களனி பாலம் இன்று திறக்கப்படுகிறது

நாட்டில் முதல்தடவையாக அதிசக்திவாய்ந்த தொழில்நுட்பத்துடன் கூடிய கம்பி இணைப்பின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட புதிய களனிப் பாலத்தை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸஆகியோர் இன்று திறந்து வைக்கவுள்ளனர்.

இந்தப் புதிய களனிப் பாலத்துக்கு கல்யாணி தங்க நுழைவு எனப் பெயரி டப்பட்டுள்ளது. சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இந்த வைபவம் நடைபெறும் என பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண் டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை திறக்கப்பட்ட பின்னர், கொழும்பு பிரதான நகரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத் திற்கான வீதியும் இணைக்கப்பட்டால், கொழும்புக்குள் வரும் வாகனங் களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கும்.

வாகனங்கள் அதிகரித்துள்ள நிலையில், தற்போதைய களனிப் பாலம் அத ற்கு ஈடு கொடுக்க முடியாது என்பதால், 2014 ஆம் ஆண்டு புதிய களனி பா லத்தை நிர்மாணிக்கும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெருந்தெருக்கள் அமைச்சர் என்ற வகையில்

அன்று உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருந்தார். கொழும்பு - கட்டுநாயக்க நெடுஞ்சாலையின் கொழும்பு நிறைவிடத்திலிருந்து பண்டாரநாயக்க சுற்றுவட்டம் வரை 6 வழித்தடங்கள் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பால த்தில் அங்கிருந்து ஒறுகொடவத்தை வரையும், இங்குறுகொட சந்தி வரையும், துறைமுக நுழை வாயில் வரையும் 4 வழித் தடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக மணல் ஏற்றியவர் கைதானார்

மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேசத்தில் அனுமதிப்பத்திரத்தை மீறி உழ வு இயந்திரத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டு ள்ளார்.

நேற்று அதிகாலை கைதுசெய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதேவேளை வாழைக்காடு பிரதேச ஆற்றில் அனுமதிப்பத்திரத்தை மீறி உழவு இயந்திரத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்த துடன் உழவு இயந்திரத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவங்களில் கைது செய்தவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் 418 பேர் குணமடைந்தனர்

கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 418 பேர் பூரண குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கின்றது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணம டைந்தவர்களின் எண்ணிக்கை 527,528 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோல், நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணி க்கை 557,172 அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில் 14,158 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி யோகராணி சின்னராசா

யாழ்/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையில் கடமையாற்றி கடந்த 17.06.2021 இல் ஓய்வு பெற்ற திருமதி யோகராணி சின்னராசா அவர்களது ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகிறோம்.

சேவையாற்றிய பாடசாலைகள்

யா/இமையாணன் அ.த.க.பாடசாலை 17.08.1988 -04.02.1992
யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 05.02.1992-31.12.1993
யா/இமையாணன் அ.த.க.பாடசாலை 01.01.1994-29.02.1996
யா/ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை 01.03.1996-05.05.1998
யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை 06.05.1998-21.09.1998
யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை 22.09.1998-07.02.1999
யா/இமையாணன் அ.த.க.பாடசாலை 08.02.1999-04.05.2010
யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை 05.05.2010-17.06.2021

வாழ்த்துவோர்,
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.

மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி கமலராணி இராசையா

யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையில் கடமையாற்றி கடந்த 28.09.2021 இல் ஓய்வு பெற்ற திருமதி கமலராணி இராசையா அவர்களது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

சேவையாற்றிய பாடசாலைகள்

யா/இமையாணன் அ.த.க.பாடசாலை - 16.11.2009-13.05.2012
யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 14.05.2012- 13.05.2014
யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை 14.05.2014- 28.09.2021

வாழ்த்துவோர்,
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை

கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்

1AB, 1C பாடசாலைகளுக்குரிய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள 1AB, 1C பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் வடமாகாண கல்வி அமைச்சினால் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் 2021.12.07 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக "செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்," என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நியந்தனைகள்

1. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. இலங்கை அதிபர் சேவை 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2 ஐச் சேர்ந்தவர்களில் தெரிவு மேற்கொள்ளப்படும்.
3. தற்போது கடமையாற்றும் பாடசாலையில் (1AB, 1C) அதிபராக 03 வருட காலம் சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. மாகாணக் கல்வி அமைச்சின் "அதிபர் வெற்றிடம் நிரப்புதல்" சுற்றுநிருபம் இல 2021/01 இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

கல்வி அமைச்சின் நேர்முகத் தேர்வுச் சபையின் நேர்முகப்பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு, சேவை நிலையம் வழங்கப்படும். மேற்படி தெரிவு செய்தல் தொடர்பாக வட மாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்

விண்ணப்பம் கோரப்படும் பாடசாலைகள்

இல	வலயக்கல்வி அலுவலகம்	பாடசாலை	பாடசாலை வகை
01	முல்லைத்தீவு	மு/கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம்	1C
02		மு/அளம்பில் றோ.க.மகா வித்தியாலயம்	1C
03	தென்மராட்சி	யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி	1AB
04		யா/வரணி மத்திய கல்லூரி	1AB
05	மடு	மன்/கருங்கண்டல் றோ.க.த.மகா வித்தியாலயம்	1C
06		மன்/நட்சணாமருதமடு அ.த.க.பாடசாலை	1C
07	வடமராட்சி	யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி	1AB
08	யாழ்ப்பாணம்	யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி	1C
09		யா/பாசையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகளிர் பாடசாலை	1C
10		யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்	1C
11	வலிகாமம் தெற்கு	வ/பூவரசங்குளம் மகா வித்தியாலயம்	1AB
12	மன்னார்	மன்/பண்டாரவெளி அ.மு.க.பாடசாலை	1C

24.11.2021

இ.இளங்கோவன், செயலாளர்.

சொந்த மண்ணில் பங்களாதேஷை வெள்ளையடித்தது பாகிஸ்தான் அணி

பங்களாதேஷ் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 போட்டியில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 3-0 என்ற கணக்கில், பாகிஸ்தான் அணி முழுமையாக கைப்பற்றியுள்ளது.

டாக்கா மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 124 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, நய்ம் 47 ஓட்டங்களையும் ஷெமின் ஹொசைன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பாகிஸ்தான் அணியின் பந்துவீச்சில், உஸ்மான் காதீர் மற்றும் மொஹமட் வசிம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் தஹானி மற்றும் ஹரீஸ் ரவூப் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 125 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஹெய்டர் அலி 45 ஓட்டங்களையும் மொஹமட் ரிஸ்வான் 40 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், மொஹமதுல்லா 3 விக்கெட்டுகளையும் சஹீதுல் இஸ்லாம் மற்றும் அமினுல் இஸ்லாம் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஹெய்டர் அலி தெரிவுசெய்யப்பட்டார். மேலும், தொடரின் நாயகனாக மொஹமட் ரிஸ்வான் தெரிவுசெய்யப்பட்டார்.

ரி-10 லீக் கிரிக்கெட் போட்டி; டெல்லி புல்ஸ்- அபுதாபி வெற்றி!

2021-22ஆம் ஆண்டு பருவக்காலத்துக்கான ரி-10 லீக் தொடர், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

இதில் முதல் நாளில் இரண்டு லீக் போட்டிகள் நடைபெற்றன.

அபுதாபியில் நடைபெற்ற முதல் லீக் போட்டியில், நோதர்ன் வோரியஸ் அணியும் டெல்லி புல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி புல்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நோதர்ன் வோரியஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 107 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ரொவ்மன் பவல் 38 ஓட்டங்களையும் மொயின் அலி 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

டெல்லி புல்ஸ் அணியின் பந்துவீச்சில், சிராஸ் அஹமட், ராம்போல், ரொமரியோ செப்பர்ட் மற்றும் பிராவோல ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 108 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய டெல்லி புல்ஸ் அணி, 9 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் டெல்லி புல்ஸ் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மொஹமட் ஹபீஸ் 31 ஓட்டங்களையும் ரமஹனுல்லா குர்பாஸ் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நோதர்ன் வோரியஸ் அணியின் பந்துவீச்சில், ஜோசுவா லிட்டில், இம்ரான் தாஹிர், அபிமன்யு மிதுன் மற்றும் கிறிஸ் ஜோர்தான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, ரமஹனுல்லா குர்பாஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது லீக் போட்டியில், அபுதாபி அணியும் பங்களா டைகர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

அபுதாபியில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற, பங்களா டைகர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அபுதாபி அணி, நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில், 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 145 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஸ்டெயர்லிங் 59 ஓட்டங்களையும் கிறிஸ் கெய்ல் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களா டைகர்ஸ் அணியின் பந்துவீச்சில், போல்க்னர், உதான மற்றும் ஹவ்ல் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 146 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களா டைகர்ஸ் அணியால், 10 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 105 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் அபுதாபி அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஆந்ரே பிளெட்சர் 24 ஓட்டங்களையும் ஹஸ்ரதுல்லா சஷாய் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அபுதாபி அணியின் பந்துவீச்சில், மெர்சன்ட் டி லேன்ஞ் 5 விக்கெட்டுகளையும் லியாம் லிவிங்ஸ்டன், ஜேமி ஓவர்டொன் மற்றும் டேனி பிரிக்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 5 விக்கெட்டுகளை வீழ்த்திய மெர்சன்ட் டி லேன்ஞ் தெரிவுசெய்யப்பட்டார்.

ஏடிபி டென்னிஸ் சாம்பியன்ஷிப் கிண்ணம் வென்றார் ஸ்வெரேவ்

உலக ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் அரையிறுதியில் நம்பர் ஒன் வீரர் ஜோகோவிச்சை தோற்கடித்தார் ஸ்வெரேவ்.

ஏ.டி.பி. இறுதிச்சுற்று எனப்படும் உலக ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி இத்தாலியின் துரின் நகரில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் நடப்பு சாம்பியனும் 2 ஆம் நிலை வீரருமான ரஷ்யாவைச் சேர்ந்த டேனில் மெட்வடேவும், ஒலிம்பிக் சம்பியனும், 3 ஆம் நிலை வீரருமான ஜெர்மனியைச் சேர்ந்த அலெக்சாண்டர் ஸ்வெரேவும் மோதினர்.

இதில், ஸ்வெரேவ் 6-4, 6-4 என்ற நேர் செட்கணக்கில் மெட்வடேவை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

ஏடிபி இறுதிச்சுற்று உலக ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் ஸ்வெரேவ் பெறும் இரண்டாவது கிண்ணம் இதுவாகும்.

லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடர்; பார்வையிட இரசிகர்களுக்கு அனுமதி

2021 லங்கா பிரீமியர் லீக் டி-20 கிரிக்கெட் தொடரினை நேரில் பார்வையிடுவதற்கு வரையறுக்கப்பட்ட ரசிகர்களுக்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தகவலை விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பதிவில் உறுதிபடுத்தியுள்ளார்.

அதன்படி கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் 2021 எல்.பி.எல். தொடரில் வரையறுக்கப்பட்ட பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

லங்கா பிரீமியர் லீக் போட்டிகள் டிசம்பர் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதன் முதற்கட்ட போட்டிகள் கொழும்பு, ஆர் பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளது, நாக்-அவுட் சுற்றுகள் ஹம்பாந்தோட்டை மைதானத்தில் நடைபெறும்.

2021 லங்கா பிரீமியர் லீக்கின் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் டிசம்பர் 23 அன்று நடைபெறும்.

இதேவேளை காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்று வரும் இலங்கை - மேற்கிந்திய தீவுகள் இடையிலான டெஸ்ட் தொடரிலும் மட்டுப்படுத்தப்பட்ட பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ராமல் ராஜபக்ஷ அந்த பதிவில் உறுதிபடுத்தியுள்ளார்.

ஜூனியர் உலகக் கிண்ண ஹொக்கி பாகிஸ்தான் வீரர்கள் இந்தியா வருகை

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் வரும் 24 ஆம் திகதி முதல் டிசம்பர் 5 ஆம் திகதி வரை ஜூனியர் உலகக் கிண்ண ஹொக்கி தொடர் நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் அணி இந்தியா வந்து சேர்ந்தது. டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கிய வீரர்களை, பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் வரவேற்றனர். தூதரகத்தில் பாகிஸ்தான் அணியினருக்கு மதிய விருந்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பேசிய பாகிஸ்தான் தூதரக பொறுப்பாளர், ஜூனியர் உலகக் கோப்பை தொடரில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற வாழ்த்து தெரிவித்தார். பாகிஸ்தானின் தேசிய விளையாட்டு ஹாக்கி என்று கூறிய அவர், வீரர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், திறமையுடனும் செயல்படுவார்கள் என்று நம்புவதாக தெரிவித்தார்.

டிம் பெய்ன் பதவி விலகலை தொடர்ந்து அவுஸ்திரேலிய அணிக்கு கம்மின்ஸ் புதிய கப்டன்?

அவுஸ்திரேலிய டெஸ்ட் கப்டனாக வேகப்பந்து வீச்சாளர் கம்மின்ஸ் தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் கேப்டன் டிம் பெய்ன் நேற்று தனது பதவியை இராஜினாமா செய்தார். சக பெண் ஊழியருக்கு பாலியல் ரீதியில் தகவல் அனுப்பிய புகாரில் அவர் பதவி விலகி உள்ளார்.

4 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்வுக்காக டிம் பெய்ன் கப்டன் பதவியை தற்போது இழந்துள்ளார். அவர் குறித்த தகவல்கள் வெளியானதால் இது இந்த முடிவை எடுத்துள்ளார்.

ஆசஸ் டெஸ்ட் தொடர் தொடங்கவுள்ள நிலையில் டிம் பெய்ன் பதவி விலகி உள்ளதால் புதிய கப்டனை தேர்வு செய்ய வேண்டிய நிலை அவுஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் டெஸ்ட் தொடர் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. முதல் போட்டி வருகிற 8 ஆம் திகதி பிரிஸ்பனில் தொடங்குகிறது.

மொத்தம் 5 டெஸ்ட் போட்டிகள் நடைபெறுகிறது. ஜனவரி 18 திகதியுடன் டெஸ்ட் தொடர் முடிவடைகிறது.

அவுஸ்திரேலிய டெஸ்ட் கப்டனாக வேகப்பந்து வீச்சாளர் கம்மின்ஸ் தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. முன்னாள் வீரர்கள் மார்க் டெய்லர், டென்னிஸ் லில்லி, ஸ்டீவ்வாக் ஆகியோர் அவரை வெகுவாக பாராட்டி இருந்தனர்.

இதனால் டிம் பெய்ன் இடத்தில் கம்மின்ஸ் கப்டன் ஆகிறார். 28 வயதான அவர் ஏற்கனவே துணை கப்டனாக பணிபுரிந்து உள்ளார். இன்னும் சில தினங்களில் அவுஸ்திரேலிய தேர்வு குழு புதிய கேப்டனை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டார் கிராண்ட் பிரிக்ஸ் போட்டி; லீவிஸ் ஹெமில்டன் முதலிடம்

பார்முயுலா-1 கார்பந்தயத்தின் கட்டார் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், மெசிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லீவிஸ் ஹெமில்டன் முதலிடம் பிடித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் பார்முலா 1 கார் பந்தயம், 23 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும்.

இதன்படி, நடப்பு ஆண்டின் 20 ஆவது சுற்றான கட்டார் கிராண்ட் பிரிக்ஸ், நேற்று லோசைல் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 306.66 கிலோ மீட்டர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

இதில் மெசிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லீவிஸ் ஹெமில்டன், பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 24 நிமிடங்கள் 28.471 வினாடிகளில் இலக்கை கடந்து முதலிடத்தை பிடித்தார். இதற்காக அவருக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டது.

அவரை விட 25.743 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, ரெட் புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டபேன் இரண்டாவது இடத்தை பெற்றார்.

அத்தோடு அவர், இரண்டாம் இடத்திற்கான 19 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டார்.

59.457 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, அல்பைன் அணியின் வீரரான பெர்னாண்டோ அலோன்சோ மூன்றாவது இடத்தை பிடித்தார். அதற்கு அவருக்கு 15 புள்ளிகள் வழங்கப்பட்டது.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 20 சுற்றுகளின் முடிவில், ரெட் புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டபேன் ஒன்பது வெற்றிகளுடன் 351.5 புள்ளிகளுடன் முதலாவது இடத்தில் உள்ளார்.

மெசிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லீவிஸ் ஹமில்டன் ஏழு வெற்றிகளுடன் 343.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

மெசிடஸ் பென்ஸ் அணியின் வீரரான வால்டெரி போட்டாஸ், ஒரு வெற்றியுடன் 203 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

அடுத்த இருபத்தொன்றாவது சுற்றான சவுதி அரேபியன் கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும்; டிசம்பர் 5ஆம் திகதி, ஜெட்டா கார்னிச் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

உகாண்டா பாரா-பேட்மிண்டனில் இந்திய அணிக்கு 47 பதக்கங்கள்

உகாண்டாவில் நடைபெற்ற பாரா-பேட்மிண்டன் போட்டியில் இந்திய அணியினர் 47 பதக்கங்களை வென்றனர்.

உகாண்டா தலைநகர் கம்பாலாவில் பாரா-பேட்மிண்டன் சர்வதேச போட்டி நடைபெற்றது.

இதில் இந்தியா சார்பில் கலந்து கொண்ட வீரர் - வீராங்கனைகள் சிறப்பாக விளையாடி பதக்கங்களை குவித்தனர். 16 தங்கம், 14 வெள்ளி, 17 வெண்கலம் என மொத்தம் 47 பதக்கங்கள் பெற்று அசத்தினர்.

பாலக் கோலி, அபு ஹபைதா மற்றும் அம்மு மோகன் ஆகியோர் தலா இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றனர். மானசி ஜோஷி மகளிர் ஒற்றையர் எஸ்எல்-3 பிரிவில் தங்கம் வென்றார்.

தங்கம் வென்றவர்கள்: மனோஜ் சர்க்கார், சுகந்த் கதம், ஹர்திக் மக்கர், அபு ஹபைதா, தினகரன், பாலக் கோலி, மானசி ஜோஷி, ஜோதி, அம்மு மோகன், அர்வாஸ் அன்சாரி, தீப் ரஞ்சன், சிராக் பரேத்தா, ராஜ் குமார், மந்தீப் கவுர், ருத்திக், சிவராஜன்.

டோக்கியோ பாராலிம்பிக்கில் தங்கம் வென்ற பிரமோத் பகத், ஆடவர் ஒற்றையர் எஸ்எல்-3 பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றார். ஆண்களுக்கான இரட்டையர் எஸ்எல்3-எஸ்எல்4 போட்டியில் மனோஜ் சர்க்காருடன் இணைந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். பின்னர் கலப்பு இரட்டையர் எஸ்எல்3-எஸ்யு5 போட்டியில் பாலக் கோலியுடன் இணைந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இப்பத்திரிகை ஏரியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

2021 இல் அனைத்து மாகாணங்களிலும் தாக்குதலை நடாத்த நவ்பர் மௌலவி விரும்பினார்; ஜஹ்ரான் அதை விரும்பவில்லை

ஐ.எஸ் அமைப்பு 2021ம் ஆண்டிலேயே இலங்கையில் தாக்குதலை மேற் கொள்ள திட்டமிட்டிருந்தது. எனினும் ஜஹ்ரான் ஹாசிம் உடனடியாக தாக்குதலை மேற்கொள்ள விரும்பியதால் 2019 இல் தாக்குதல் இடம்பெற் றது என பேராசிரியர் ரொகான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ் அமைப்பின் இரண்டாவது தலைவரான நவ்பர் மௌலவி 2021 இல் தாக்குதலை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார். அவர் ஒன்பது மாகாணங்களி லும் தாக்குதலை மேற்கொள்ள விரும்பினர். ஆனால் இது தொடர்பில் தலைவர் ஜஹ்ரான் ஹாசிமுடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டது. அவர் 2019 இல் தாக்குதலை மேற்கொள்ளவேண்டும் என நினைத்தார் என பேராசிரியர் ரொகான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

2021 இல் அவர்கள் தாக்குதலை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தனர். ஆனால் அதில் சம்பந்தப்பட்ட அனைவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதால் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர் அல்லது கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நவ்பர் மௌலவி இலங்கையில் ஐஎஸ் அமைப்பின் கொள்கையை விஸ்தரிக்க திட்டமிட்டிருந்தார், ஒன்பது மாகாணங்களிலும் தாக்குதலை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார் என ரொகான் குணரட்ண குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் ஜஹ்ரான் ஹாசிம் உடனடியாக தாக்குதலை மேற்கொள்ள விரும்பினார். இருவருக்கும் இடையில் கருத்துவேறுபாடு காணப்பட்டது, 2019 இல் நியுசிலாந்தில் இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் அவர் தனது திட்டத்தை விரைவுபடுத்தினார். தனது குழுவினரை உடனடியாக தாக்குதலை முன்னெடுக்குமாறு உத்தரவிட்டார். அதுவே உயிர்த்தஞாயிறு தாக்கு தல்களிற்கு வழிவகுத்தது எனவும் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மாருக்கு பூஸ்டர் தடுப்பூசி திட்டம்

கொவிட் தடுப்பூசியின் 2 டோஸ்களையும் பெற்று 6 மாதங்களை கடந்த கர்ப்பவதி பெண்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்தலாம். என விசேட வைத் திய நிபுணர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார்.

6 மாதங்களின் பின்னர் தடுப்பூசியின் வீரியம் குறைவதனால் கர்ப்பிணிப் பெண் ஒருவர் தொற்றுக் குள்ளானால் அது குழந்தைக்கும் பாதிப்பை ஏற்படு த்தலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் கர்ப்பிணிப் பெண்கள் பூஸ்டர் தடுப்பூசியை உரிய காலத்தில் செலுத்திக் கொள்வது சிறந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு அதிகளவு மரக்கறிகள்; விலைகள் சற்று குறைவு

நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்று அதிகாலையில் மரக்கறிகள் கொண்டுவரப்பட்டிப்பதாகவும் இதனால் கிலோவுக்கு 50 தொடக்கம் 60 ரூபாய் விலை குறைந்ததாகவும் பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் கூறுகின்றனர்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்றைய தினம் மலையகத்திலிருந்து கரட், லீக்ஸ், பீற்றூட், கோவா ஆகிய மரக்கறிகள் கிடைத்துள்ளன.

சில காய்கறிகளுக்கு அதிக விலை கிடைத்தாலும், அந்த விலைக்கு விற்கப்படாதால், விலை குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். தம்புள்ளை பொருளாதார நிலையத்திற் கு நேற்று கத்தரிக்காய், பயிற்றங்காய், புடலங்காய், உருளைக்கிழங்கு, தக்காளி போன்ற மரக்கறிகள் கணிசமான அளவில் கிடைத்துள்ளதாகவும் தொலை தூரப் பகுதிகளிலிருந்து மரக்கறிகளைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளமையே விலை வீழ்ச்சிக்குக் காரணம் எனவும் தெரியவந்துள்ளது.

அக்கரப்பத்தனையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்ப்பு போராட்டம்

அக்கரப்பத்தனை - அல்பியன் தோட்டத்தை சேர்ந்த ஆட்லோ, பிரஸ்டன், சின்ன நாகவத்தை, நியுபிரஸ்டன் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 1500க்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) தொழிலுக்குச் செல்லாமல் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து சின்ன நாகவத்தை தொழிற்சாலைக்கு முன்பாக ஆர் ப்பாட்டத்தில் அவர்கள் ஈடுபட்டதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித் துள்ளார். இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் தெரிவித்துள்ளதாவது, தேயிலை மலைகள் காடாகி கிடக்கின்றன.

கொழுந்து விளைச்சல் குறைவாக இருப்பதால், தற்போது தோட்ட நிர்வாகம் ஒரு நாள் சம்பளத்திற்கு 20 கிலோ கட்டாயமாக பறிக்க வேண்டுமெனவும் நல்ல கொழுந்து எடுத்து கொடுக்க வேண்டுமெனவும் அழுத்தம் கொடுத்து வருகின்றது.மேலும் குறைவாக கொழுந்து பறித்து கொடுத்தால் கிலோ கணக்கில் சம்பளம் தருகின்றோம் என நிர்வாகம் கூறுகின்றது. இதனால் தொழில் ரீதியாக பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றோம் என கவலை வெளியிட்டுள்ளனர். இதேவேளை ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற

பகுதிக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அதிகாரிகளும் அக்கரப்ப த்தனை பிரதேச சபை தவிசாளர் உறுப்பினர்களும் வருகை தந்ததுடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி.சக்திவேல் சம்பவ

இடத்திற்கு வருகை தந்த அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இ தன்போது தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய சலுகைகளை உடன டியாக வழங்குமாறும் தேயிலை மலைகளை துப்பரவு செய்யுமாறும் அதிகா ரிகளுடன் கலந்துரையாடிய பின்னர்,

தோட்ட அதிகாரியும் அதனை ஏற்றுக்கொண்டதை தொடர்ந்து ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

சுகாதார விதிகளை மீறிய பஸ் சாரதிகள், வர்த்தகர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

மேல் மாகாணத்தில் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மீறிய பயணிகள் பேருந்து சாரதிகள் 382 பேர் மற்றும் 89 குளிரூட்டப்பட்ட பேருந்து சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றாத 573 விற்பனையாளர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள் ளது. மேல் மாகாணத்தை மையமாகக் கொண்ட

இந்தச் சுற்றிவளைப்பு நேற்றுமுன் தினம் பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 ம ணி வரை இடம் பெற்றது. இதற்காக 435 பொலிஸார் சேவையில் இணை த்துக் கொள்ளப்பட்டனர். 987 பயணிகள் பஸ்கள், 223 குளிரூட்டப்பட்ட பஸ்கள் மற்றும் 1366 விற்ப னை நிலையங்களும் சோதனை செய்யப்பட்டன.

பதவியினை இராஜினாமா செய்வதாக அறிவித்திருக்கும் மஹிந்த சமரசிங்க

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யப்போவதாக மஹிந் த சமரசிங்க அறிவித்திருக்கின்றார்.

நாடாளு மன்றில் நேற்று (செவ்வாய்கிழமை) உரையாற்றியபோதே அவர் இ து குறித்த அறிவித்தலினை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளின் தூதுவர் பதவியை ஏற்ப தற்காகவே இவ்வாறு பதவியை இராஜிநாமா செய்யவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 29ஆம் திகதி அமெரிக்காவிற்கு பயணமாகவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

களை கொல்லி பதிவாளர் பதவி நீக்கப்பட்டிருக்கிறார்

பீடை கொல்லிகளுக்கான தடையை நீக்கி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதை தொடர்ந்து களை கொல்லி பதிவாளர் நாயகம் கலாநிதி ஜே.ஏ.சுமித் பதவி நீக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத் கமகே கூறியிருக்கின்றார். 7வருடங்களாகத் தடை செய்யப்பட்டிருந்த 5 பீடை கொல்லி வகைகளுக் கான தடையை நீக்கியமை தொடர்பில் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு ள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் களை கொல்லி பதிவா ளரால் 2021.11.01 வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செயலிழக்கச் செய்வதுடன் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (முன்னர் வந்த செய்தி பக்கம் 10 இல்)

தேசிய கராத்தே அணிக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து முதன்முறையாக பெண் வீராங்கனை தேர்வாகியுள்ளார்

கிழக்கு மாகாணத்தில் இருந்து முதல் தடவையாக தேசிய கராத்தே அணிக்கு பெண் வீராங்கனை ஒருவர் தேர்வாகியுள்ளதுடன், மட்டக்களப்பிலிருந் து இருவர் தேர்வாகியுள்ளனர். மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியிலிருந்து தேசிய கராத்தே அணிக்கு தெரிவுசெய்யப்பட்ட வீரர்,வீராங்கனையை கௌரவிக்கும் நிகழ் வு நேற்று (செவ்வாய்க்கிழமை) மட்டக்களப்பு மாநகரசபையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு ஜப்பான் கராத்தே மரியோகிக்காய் சங்கத்தின் வீரர் மற்றும் வீராங்கனைகளே இவ்வாறு தேசிய கராத்தே அணிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு ஜப்பான் கராத்தே மரியோகிக்காய் சங்கத்தின் பிரதான போதனாசிரியர் பொறியியலாளர் சிகான் முருகேந்திரன் வழிகாட்டலில் போதனாசிரியர் எச்.ஆர்.சில்வாவின் பயிற்றுவிப்பு ஊடாக ஆர்.துஸ்யந்தன் என்னும் வீரரும் வி.விதுஜா என்னும் வீராங்கனையும் இவ்வாறு தேசிய கராத்தே அணிக்கு தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலிருந்து முதன்முறையாக பெண்ணொருவர் தேசிய கராத்தே அணிக்கு மட்டக்களப்பிலிருந்து

தெரிவுசெய்யப்பட்டுள்ளது டன் 21வயதுக்குட்பட்ட தேசிய அணியில் முதன் முறையாக மட்டக்களப்பிலிருந்து ஆண் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள் ளனர். இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மாநகரசபையின் விளையாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன்,பிரதி முதல்வர் க.சத்தியசீலன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், மட்டக்களப்பு ஜப்பான் கராத்தே மரி யோகிக்காய் சங்கத்தின் போதனாசிரியர் எச்.ஆர்.சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது தேசிய அணிக்கு தெரிவுசெய்யப்பட்ட வீரரும் வீராங்கனையும் இதன்போது மாநகரசபை முதல்வர்,பிரதி முதல்வரினால் கௌரவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலை

தனியார் வீட்டினை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கானதும், கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவைக்கானதுமான

கேள்வி கோரல் - 2021

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைகளுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

தொ. இல	பெறுகை இல	கேள்விகள்	உத்தரவாத வைப்புப் பணம் (மீளளிப்பு செய்யக்கூடியது) செல்லுபடியாகும் காலம் 15.12.2021 - 15.01.2022	மீளளிப்பு செய்யப்படாத கட்டணம்.
01	NP/DGH KOC/2021/G/70	தனியார் வீட்டினை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல்	N/A	500.00
02	NP/DGH KOC/2021/G/75	கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவை	50,000.00	1000.00

1. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 24.11.2021 தொடக்கம் 15.12.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்விகள் 15.12.2021 ம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு ,மாவட்ட பொதுவைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி** எனும்முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு சேவைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

3. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும், நடைமுறைகள் தொடர்பான படிவத்தினையும், விலைக்கேள்விபத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி **(தொலைபேசி இல 0212285329/0212284111)** என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

4. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

தலைவர், பெறுகைகள் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,கிளிநொச்சி.

69 இலட்சம் மக்களின் நம்பிக்கையை பெற்ற ஜனாதிபதி பைத்தியக்காரனா?

-கேள்வி எழுப்பும் பிரசன்ன ரணதுங்க-

69 இலட்சம் மக்களின் நம்பிக்கையை பெற்ற ஜனாதிபதியை பைத்தியக்காரன் எனவும், சேர் பெயில் எனவும் கூறுவது நியாயமா? என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இது ஜனாதிபதியை அவமதிக்கும் செயற்பாடு மட்டுமல்ல அவரது பிம்பத்தை சிதைக்க எடுக்கும் சதி, இதனை செய்ய வேண்டாம் என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:- நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு விலை வாசி அதிகரித்துள்ளது. மக்களுக்கு விசேட சலுகைகளை எம்மால் வழங்க முடியாது. மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை கூட நிறுத்திவிட்டு நெருக்கடிகளுக்கு மத்தியில் பயணிக்க வேண்டியுள்ளது. உலக நாடுகளில் இவ்வாறான தீர்மானங்களை முன்னெடுக்கின்றனர். விலையேற்றத்தை குறைக்க வேண்டும் என்றால் சர்வதேச சந்தையில் பொருட்களின் விலை குறைவடைய வேண்டும். அதேபோல் ஏனைய துறைகள் வழமைக்கு திரும்ப வேண்டும். குறிப்பாக சுற்றுலாத்துறை மீண்டும் வழமைக்கு திரும்ப வேண்டும். சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட 3 மில்லியன் மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாத காலத்தில் கூட நாட்டில் சுற்றுலாத்துறை தடைப்படவில்லை.

ஆனால் கொவிட் காலத்தில் முற்றுமுழுதாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் அதில் இருந்து மீண்டு வருகின்றோம். நாட்டுக்கான சுற்றுலாத்துறையில் கட்டுப்பாடுகளை விதித்து நிலைமைகளை மீட்டெடுக்க முடியாது. எனவேதான் தடுப்பூசிகளை முழுமையாக வழங்கி நாட்டினை வழமைக்கு கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. கடந்த இரண்டு மாதங்களில் சுற்றுலாத்துறையினர் மீண்டும் நாட்டுக்கு வருகை தர ஆரம்பித்துள்ளனர். இலங்கை மீதான நம்பிக்கையில், கொவிட் அச்சுறுத்தல் நிலைமைகள் குறைவாக காணப்படும் நாடாக எம்மால் இதனை முன்னெடுக்க முடிந்துள்ளது. 69 இலட்சம் மக்களின் நம்பிக்கையை பெற்ற ஜனாதிபதியை பைத்தியக்காரன் என கூறுகின்றனர். சேர் பெயில் என்கின்றனர். இது ஜனாதிபதியை அவமதிக்கும் செயற்பாடாகும். இது நியாயமானதா என எதிர்க்கட்சியிடம் கேட்கின்றோம்.

நாட்டின் கொவிட் வைரஸ் பரவலை நாம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் வேளையில் இவர்கள் கூட்டம் நடத்தி கொவிட் வைரஸை பரப்ப நினைக்கின்றனர்.

இன்று மனோ கணேசனுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது. அவருடன் தொடர்புபட்ட பலருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. அவரிடம் இருந்து கொத்தணி உருவாகியுள்ளது. இவ்வாறான நிலையில் ஜனாதிபதியை அவமதித்து அவரது பிம்பத்தை சிதைக்கவே முயற்சிக்கின்றனர் என்றார்.

வவுனியாவில் 8 காட்டு யானைகள் உயிரிழப்பு

வவுனியா மாவட்டத்தில் எட்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள தகவல்கள் தெரிவிகின்றன. வவுனியா மாவட்டத்தில் இவ் வருடம் நவம்பர் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் செட்டிகுளத்தில் 3, நெடுங்கேணியில் 3, வவுனியாவில் 2 காட்டு யானைகளும் உயிரிழந்துள்ளன.

காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைகின்றதுடன் மக்களின் வாழ்வாதாரங்களையும் அழித்தொழிக்கும் நடவடிக்கையையும் மேற்கொள்கின்றது. இதனால் மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடன் வசித்து வருகின்றனர்.

கடந்த வருடம் 2020 ஆண்டு வவுனியா மாவட்டத்தில் 10 யானைகள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காமினி லொக்குகேவுக்கு கொரோனா உறுதி

மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். இதனால் தற்சமயம் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அண்மைய நாட்களில் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளான இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே ஆவார்.

முன்னதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசனும் கொரோனா தொற்றுக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 4 மில்லியன் பைசர் டோஸ்கள் நாட்டை வந்தடைந்தன

கொவிட்-19 தடுப்பூசி திட்டத்தின் கீழ் இலங்கையர்களுக்கு மூன்றாவது டோஸ் வழங்குவதற்காக மேலும் 4 மில்லியன் பைசர் டோஸ்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நாட்டை வந்தடைந்துள்ளது.

2,434 கிலோ கிராம் எடை கொண்ட இந்த தடுப்பூசி அளவுகள் முதலில் நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாமில் கட்டாரின் தோஹாவுக்கு கொண்டு செல்லப்பட்டது.

அதன் பின்னர் அங்கிருந்து கட்டார் எயர்வேஸ் மூலம் நேற்று காலை 08.40 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

பின்னர் விசேடமாக குளிரூட்டப்பட்ட லொறிகளின் உதவியுடன் அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

ஓட்டமாவடியில் 3234 சடலங்கள் அடக்கம்

நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்தவர்களில் ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ள சடலங்களின் எண்ணிக்கை 3234 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களது சடலங்கள் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் உள்ள ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்று முன்தினம் மேலும் ஒருவரின் சடலம் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு முஸ்லிம் ஒருவரின் ஜனாசா நேற்றையதினம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அங்கு இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ள கொவிட்-19 சடலங்களின் எண்ணிக்கை 3234 ஆக அதிகரித்துள்ளது.

அனைத்து முச்சக்கர வண்டிகளும் மீற்றர் ரெக்ஸிகளாக மாற்றப்படும்

-விரைவில் வர்த்தமானி வெளியாகும் என்கிறார் அமைச்சர்-

நாட்டில் பயணிகள் சேவையில் ஈடுபடும் அனைத்து முச்சக்கர வண்டிகளும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மீற்றர் ரெக்ஸிகளாக மாற்றப்படுமென்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மேல் மாகாணத்தில் இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

மூன்று மாத காலப்பகுதிக்குள் அனைத்து பிரதேசங்களிலும் இதற்கான நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும். மீற்றர் இல்லாது வாடகை முச்சக்கர வண்டிகளைச் செலுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

சபையில் திஸ்ஸ குட்டிக்கு சபாநாயகர் கடும் எச்சரிக்கை

அதியுயர் சபையில் பெண்களை அவமதிக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என ஆளுங்கட்சி எம்.பி திஸ்ஸ குட்டியாராச்சியை சபாநாயகர் கடுமையாக எச்சரித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அமர்வை ஆரம்பித்து வைத்து, சபாநாயகர் அறிவிப்பை விடுக்கும்போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, பாராளுமன்றத்தில் இல்லாத மற்றொரு பெண் ஆகியோரை, ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி அதியுயர்சபையில் அவமதிக்கும் வகையில் பேசியதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் சபாநாயகர் என்ற வகையில் நான் ஆழமாக ஆராய்ந்துள்ளேன் எனவும் தெரிவித்தார்.

திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பியின் உரை தொடர்பில் நான் கவலையடைகிறேன். அதியுயர் சபையில் பெண்களை அவமதிக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என கடுமையாக எச்சரிக்கிறேன் எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இதுபோன்ற செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதை உறுதி செய்ய ஆளும், எதிர்க்கட்சி பிரதமக் கொறடாகள் இது தொடர்பில் இருதரப்பு எம்.பிகளுக்கும் அறியப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பெண்களை அவமதிக்கும் செயற்பாடுகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து இடம்பெற்றால், நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் அந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பேன் எனவும் எச்சரித்தார்.

கிளைபோசேட்டு உள்ளிட்ட 5 பீடை கொல்லிகளின் பாவனைக்கு தடை நீக்கம்

கிளைபோசேட்டு உள்ளிட்ட பீடை கொல்லிகளின் பாவனை மற்றும் விற்பனையை தடை செய்து 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்யும் புதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பீடை கொல்லிகள் பதிவாளர் ஜயக்கொடி ஆராச்சிகே சுமித்தினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இந் நிலையில், குறித்த புதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டமை தொடர்பில், பீடை கொல்லிகள் பதிவாளரிடம் விளக்கம் கோருமாறு, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே, அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தங்க கடத்தலில் ஈடுபட்ட 10 இலங்கையர்கள் பெங்களூர் விமான நிலையத்தில் கைது

பெங்களூரில் உள்ள கெம்பெகவுடா சர்வதேச விமான நிலையத்தில் உடலில் மறைத்து வைத்து சூட்சுமமாக தங்கம் கடத்திய குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த இரு ஆண்களையும், 8 பெண்களையும் கைது செய்துள்ளதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் திங்கட்கிழமை தெரிவித்தனர்.

இந்திய சுங்கப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு இணங்க இந்த கைது நடவடிக்கை சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் கட்டுநாயக்க, சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமானமான UL 171 இல் 140 பயணிகளுடன் இணைந்து பெங்களூருக்கு பயணித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி ஒரு கோடி இந்திய ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களிடம் இருந்து பெறப்படும் தகவலை அடிப்படையாக கொண்ட தங்கக் கடத்தலில் தொடர்புடைய முழு கும்பலையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுணதீவில் 50 மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, வவுணதீவு பகுதியில் 50 மதுபான போத்தல்களுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்துள்ளார்.

விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் இணக்கவே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் மோட்டார் சைக்கிள் ஒன்றில் 50 மதுபான போத்தல்களை வியாபார நடவடிக்கைகளுக்காக கொண்டு செல்லும்போதே நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வவுணதீவு வலையிறவு பாலத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். இதன்போது சந்தேக நபர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

14 மில்லியன் ரூபாவை டுபாய்க்கு கடத்த முயன்றவர் கைது

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்களுடன் சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார். அவர், 14,060,000 ரூபா பெறுமதியான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்களை டுபாய்க்கு கடத்த முற்பட்டதாக சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அவரிடம் இருந்து 10 மில்லியன் இலங்கை ரூபாவும் 20,000 அமெரிக்க டொலர்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் கொழும்பில் வசிக்கும் 27 வயதான வர்த்தகர் ஆவார். கட்டுநாயக்க விமான நிலைய புறப்படும் முனையத்தில் பணிபுரியும் சுங்க அதிகாரிகள் குழுவினர் சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

15 வயது சிறுமியை கர்ப்பிணியாக்கிய சகோரியின் கணவர்

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் 15 வயது சிறுமி ஒருவரை கர்ப்பிணியாக்கிய சகோரியின் கணவர் தலைமறைவாகியுள்ளதுடன் சிறுமியின் தாயார் மற்றும் சிறுமியின் சகோதரியை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக திருக்கோவில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் உள்ள 15 வயது சிறுமி தாய் மற்றும் திருமணம் முடித்த சகோதரியுடன் வாழ்ந்து வந்துள்ளார். இந்த நிலையில் 31 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான தாயின் சகோதரியின் கணவன் குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நிலையில் சிறுமி 7 மாத கர்ப்பிணியாகியுள்ளார். இதனையடுத்து இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சிறுவர் பிரிவு பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வந்த நிலையில் சிறுமியை கர்ப்பமாக்கிய சிறுமியின் சகோதரியின் கணவர் தலைமறைவாகியதை அடுத்து சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதனையடுத்து தலைமறைவாகிய நபரை பொலிஸார் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதுடன் குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ள உடந்தையாக இருந்த சிறுமியின் 54 வயதுடைய தாயார் மற்றும் சிறுமியின் 24 சகோதரி ஆகிய இருவரையும் நேற்று பொலிஸார் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வருடத்தில் சபரிமலையானின் மலைக்க வைக்கும் வருமானம்

சபரிமலையானின் காணிக்கை உள்ளிட்ட வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, ஒன்பது மடங்கு உயர்ந்துள்ளது. கொரோனா தொற்றுக் காரணமாக கடந்த ஆண்டு மண்டல, மகரவிளக்கு பூஜையின் ஆரம்பத்தில் இரண்டாயிரம் பேரும், பின்னர் ஐந்தாயிரம் பேரும் அனுமதிக்கப்பட்டனர். இந்த வருட பூஜைகள் ஆரம்பம் முதலே 30 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கேற்ப சபரிமலையில் ஐயப்பன் ஆலயத்தின் வருமானமும், அதிகரித்துள்ளது.

கடந்த ஆறு நாட்களில் மட்டும் ஐந்து கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது. பெருமழை மற்றும் காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக கடந்த ஆறு நாட்களில் தினசரி தலா ஏழாயிரம் பக்தர்கள் மட்டுமே வந்து சென்றுள்ளனர்.

இனிவரும் நாட்களில் இதன் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென, எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்பம், அரவணை விற்பனை மற்றும் காணிக்கையில் ஒரு கோடி ரூபா கிடைத்ததுடன், ஒன்றே கால் லட்சம் டின் அரவணையும், 40 ஆயிரம் பக்கெட் அப்பமும், விற்பனையாகியுள்ளது. நடை திறந்த பின்னர், சபரிமலையில் கடைகள் ஏலத்தின் மூலம் ஒன்றரை கோடி ரூபா கிடைத்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக, இணையம் மூலம் காணிக்கை செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம், சபரிமலை வருமானம் மேலும் அதிகரிக்குமெனவும், சபரிமலை நிர்வாக அதிகாரியொருவர் தெரிவித்தார். மழை முழுமையாக ஓய்ந்த பின்னர், தினமும் 50 ஆயிரம் பக்தர்களை அனுமதிப்பது குறித்து, பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழகத்தில் வலுவடையும் தாழமுக்கம் மூன்று தினங்களுக்கு கனமழை



தென்மேற்கு வங்கக்கடலில் இன்று காலை(24) குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகுவதற்கு வாய்ப்புள்ளதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இது தொடர்பில் வெளியாகியுள்ள அறிவிப்பில்,

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை 25ஆம் திகதி முதல் 27-ஆம் திகதி வரை, அதி கனமழைக்கு வாய்ப்புள்ளது.

குறிப்பாக டெல்டா மாவட்டங்கள், தென் மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் எனவும், வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. தாழமுக்கமானது, மேற்கு வடமேற்கு திசையில் இலங்கை மற்றும் தென் தமிழகத்தை நோக்கி நகரக்கூடுமெனவும், இது மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, இலங்கை மற்றும் தெற்கு தமிழ்நாடு கடல் பகுதிகள் இடையே வரக்கூடுமெனவும், ஒரே மாதத்தில் 3-வது முறையாக வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா- சிங்கப்பூர் பயணிகள் விமான சேவை மீண்டும் ஆரம்பம்

சிங்கப்பூருக்கு தினமும் 6 விமானங்கள் பயணிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் வி.டி.எல் பயணத்திட்டத்தின் கீழ் சிங்கப்பூருக்கு வருகை தரும் இந்தியர்களுக்கு, கட்டாயத் தனிமைப்படுத்தல் உள்ளிட்ட கொரோனா கட்டுப்பாடுகளிலிருந்து, விலக்களிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - சிங்கப்பூருக்கிடையே பயணிகள் விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இது குறித்து சிங்கப்பூர் சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் தெரிவிக்கும் போது, சென்னை, டெல்லி மற்றும் மும்பையில் இருந்து

தர்காவில் மலர்ந்த மத நல்லிணக்கம்; கார்த்திகை தீபமேற்றி வழிபட்ட மக்கள்

மத நல்லிணக்கத்தைப் போற்றும் வகையில், தர்காவில் கார்த்திகை தீப வழிபாடு நடைபெற்றது. ஆவிநாசியிலுள்ள தர்காவில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இப்பகுதியில் உள்ள மக்கள் மட்டுமின்றி, சுற்றுவட்டாரத்தில் உள்ள இந்து, முஸ்லிம், கிறிஸ்துவர்கள் என, அனைத்து மக்களும் தர்காவுக்கு சென்று வழிபடுவது வழக்கம். கார்த்திகை தீபத் திருநாளின் போது, கிராம மக்கள் தீபமேற்றி வழிபட்டனர்.

இது குறித்து தர்காவின் நிர்வாகிகள் கூறும் போது, திருமணம், குழந்தைப் பாக்கியம், தொழில் விருத்தியென எந்தவொரு வேண்டுதல் வைத்தாலும், நிறைவேறுவதனால், ஜாதி, மதம், இனம் பார்க்காமல் அனைத்து தரப்பு மக்களும் கானூர் தர்காவுக்கு வருகின்றனர்.

கார்த்திகை தீபத்தின் போது, இப்பகுதியில் உள்ள மக்கள், தீபம் ஏற்றுவது வழக்கம். மத நல்லிணக்கத்துக்கு சிறந்த உதாரணமாக இந்த தர்கா விளங்கி வருகின்றது. அதேபோல, சந்தனக் கூடு விழாவிற்கும் அனைத்து மதத்தினரும் தர்காவுக்கு வருகை தந்து வழிபட்டுச் செல்வதாகவும் தெரிவித்தார்.

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த நான்கு வயது இந்தியச் சிறுவன்

உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாமைச் சென்றடைந்த, மிகவும் குறைந்த வயதுடைய ஆசியர் என்ற பெருமையை, 4 வயதேயான, இந்தியச் சிறுவன் பெற்றுள்ளான்.

மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில், வாழும் ஸ்வேதா கோலேச்சா - கவுரவ் கோலேச்சா என்ற இந்திய வம்சாவளித் தம்பதியினருக்கு அத்வித் என்ற 4 வயது மகன் உள்ளார்.

மலையேறும் பயிற்சிகளை அத்வித்துக்கு அளிக்க முடிவு செய்த ஸ்வேதா,அவர் நடக்க ஆரம்பித்த நாள் முதல், அதற்கான பயிற்சிகளை வழங்கி வந்தார்.

அபுதாபியில் 15 வது மாடியிலுள்ள தங்கள் வீட்டிற்கு செல்வதற்கு படியில் ஏற வைத்து, பயிற்சிகளை ஆரம்பித்துள்ளார். இவ்வாறு தொடர் பயிற்சிகளை மேற்கொண்டு வந்த அத்வித், தற்போது உலகின் மிக உயரமான எவரெஸ்ட் மலையின் அடித்தள முகாமைச் சென்றடைந்து, சாதனை படைத்துள்ளார்.

தன் தாய் ஸ்வேதா மற்றும் மாமா சவுரப் சுக்கானியுடன், கடந்த அக்டோபர் 28ம் திகதி மலையேறுவதற்கு ஆரம்பித்த அத்வித், கடந்த 6ம் திகதி 5,364 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள அடித்தள முகாமைச் சென்றடைந்தார்.

இதன் வாயிலாக, ஆசியாவிலிருந்து, எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாமைச் சென்றடைந்த, மிகவும் குறைந்த வயதான நபரெனும், பெருமையைப் பெற்றுள்ளார்.

இந்தியாவில் தினமும் சரிவடையும் கொரோனா பாதிப்பு

இந்தியாவில் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) ஒரேநாளில் 7 ஆயிரத்து 579 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை, 3 கோடியே 45 இலட்சத்தையும் கடந்துள்ளது. இவர்களில் 3 கோடியே 39 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்து, வீடு திரும்பியுள்ளனர்.

அதேநேரம் 1 இலட்சத்து 25 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள், தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் நிலை, தொடர்ந்தும் கவலைக்கிடமாகவுள்ளது.

அதேநேரம், நேற்று ஒரேநாளில் 236 பேர் உயிரிழந்துள்ளனர்.இதனையடுத்து, உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 65 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

காவல் நிலையத்தில் பெண் காவலருக்கு நடந்த வளைகாப்பு

-அசந்து போன தம்பதிகள்-

திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் விஷ்ணுப் பிரியா. இவர் சென்னை யானைகவுனி காவல் நிலையத்தில் காவலராக உள்ளார். காவலர் விஷ்ணுப் பிரியாவுக்கு கடந்த ஆண்டு ஜெயந்திரேன் என்பவருடன் திருமணம் நடைபெற்றது.

இந்நிலையில், தற்போது ஒன்பது மாதக் கர்ப்பிணியாக இருக்கும் விஷ்ணு பிரியாவுக்கு வளைகாப்பு நடத்துவதற்கு சக காவலர்கள் முடிவு செய்துள்ளனர். இதையடுத்து நேற்று விஷ்ணுப் பிரியாவிற்கு காவல்நிலையத்திலேயே வளைகாப்பு நிகழ்ச்சியை நடத்தியுள்ளனர். மேலும் தேங்காய், பழம் உட்பட 15 சீர்வரிசை தட்டுகள் மற்றும் ஐந்து வகையான உணவுகளுடன், எந்தக் குறையுமில்லாமல் மிகச்சிறப்பாக வளைகாப்பு நிகழ்ச்சியை பொலிஸார் நடத்தியுள்ளனர்.

சக காவலர்களின் இந்த அன்பைப் பார்த்து தம்பதிகள் நெகிழ்ந்து போனார்கள். இதுபோல் காவல் நிலையத்தில் பெண் காவலருக்கு பொலிஸார் அனைவரும் சேர்ந்து வளைகாப்பு நடத்தியதைப் பார்த்த அப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் நெகிழ்ச்சியடைந்து பொலிஸாருக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

சனிதா
Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2021.11.22
சீட்டிழுப்பு இல: 3732
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ.3,641,820/-
வெற்றி இலக்கங்கள்
07 52 70 73
ஆங்கில எழுத்து N
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா
ஜயோதா Jayoda
திகதி : 2021-11-22
வெற்றி வாரம் : 1787 | வர்ணம் : மஞ்சள்
கம்பர் ஜக்பொட்
ரூ. 28,020,560/-
வெற்றி இலக்கங்கள்
34 35 38 62
ஆங்கில எழுத்து G
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,412,760/-
எதிர்வரும் கம்பர் பரிசுப்பொதி
ரூ. 28,141,980/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-11-22
வெற்றி வாரம் : 3283
வர்ணம் : மஞ்சள்
கம்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது.
ரூ. 2,506,356/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வெற்றி இலக்கங்கள்
16 26 47 48
மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 10,936,436/-

அது கோடிபதி
ஆக கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1397
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2021.11.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை
ரூ. 5,178,840/-
வெற்றி இலக்கங்கள்
26 53 57 76
ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1571
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2021.11.22
தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
I 15 18 45 50
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை
ரூ. 2,929,440/-

இந்தியத் தயாரிப்பான கோவேக்சின் தடுப்பூசியை அங்கீகரித்தது இங்கிலாந்து

இங்கிலாந்து போக்குவரத்துத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக சுகாதார அமைப்பு அளித்த அங்கீகாரத்தை ஏற்று கோவேக்சின், சினோவாக், சினோபார்ம் ஆகிய தடுப்பூசிகள் அங்கீகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முற்றிலும் இந்தியத் தயாரிப்பான 'கோவேக்சின்' கொரோனா தடுப்பூசியை உலக சுகாதார அமைப்பு தனது அவசர பயன்பாட்டு பட்டியலில் சமீபத்தில் சேர்த்தது. இந்த நிலையில், இங்கிலாந்து தனது நாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள் பட்டியலில் கோவேக்சினை சேர்த்துள்ளது. இதுகுறித்து இங்கிலாந்து போக்குவரத்து துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக சுகாதார அமைப்பு அளித்த அங்கீகாரத்தை ஏற்று, கோவேக்சின், சினோவாக், சினோபார்ம் பீஜிங் ஆகிய தடுப்பூசிகள் உடனடியாக அங்கீகரிக்கப்படுவதாக கூறப்பட்டுள்ளது. இதனால், இங்கிலாந்திற்குச் செல்வதற்குத் திட்டமிட்டுள்ள 2 டோஸ் தடுப்பூசி செலுத்தியுள்ள இந்தியர்கள் அனைவரும் இதனால் பலனடைவார்கள். அவர்கள் இங்கிலாந்து செல்வதற்கு முன்பு, பி.சி.ஆர். கொரோனா பரிசோதனை செய்யவோ, இங்கிலாந்தில் தங்கும் இடத்தில் தனிமைப்படுத்திக் கொள்ளவோ தேவையில்லையென்பது, குறிப்பிடத்தக்கது.

25.83 கோடியையும் கடந்தது உலகளாவிய கொரோனா பாதிப்பு

உலகம் முழுவதும் கொரோனா வைரஸினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 51.73 லட்சத்தையும் தாண்டியுள்ளது.

சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகின்றது. வைரஸ் தொற்று பரவி ஏறத்தாழ ஓராண்டைக் கடந்தும் இதன் வீரியம் குறையவில்லை.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவினால் பாதிப்படைந்தோரின் எண்ணிக்கை 25.83 கோடியைக் கடந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 23.37 கோடியைத் தாண்டியுள்ளது. மேலும், உலகளவில் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 51.73 லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 1.94 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெறுவதுடன், சிகிச்சை பெறுபவர்களில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கொரோனாப் பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேசில், பிரிட்டன், ரஷ்யா ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் கோதுமை பாகிஸ்தான் வழியாக ஆப்கானுக்கு

-அனுமதியளித்தார் இம்ரான் கான்-

மனிதாபிமான நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவளிக்கும் கூட்டுப் பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள உணவுப் பொருட்களின் நெருக்கடியை கருத்தில் கொண்டு, இந்தியா 50 ஆயிரம் மெட்ரிக் தொன் கோதுமை மற்றும் மருத்துவ உபகரணங்களை நன்கொடையாக அனுப்பவுள்ளதாக அறிவித்தது.

மேலும், இந்தப் பொருட்களை வாகா எல்லையைக் கடந்து, பாகிஸ்தான் வழியாக அனுப்புவதற்கு அனுமதிக்கும்படி, பாகிஸ்தானிடம் கோரிக்கை விடுத்திருந்தது. இதனை ஏற்றுக் கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், போக்குவரத்து நடைமுறைகள் இறுதி செய்யப்பட்ட பின்னர், ஆப்கானிஸ்தானுக்கு மனிதாபிமான முறையில் இந்தியா 50,000 மெட்ரிக் தொன் கோதுமையை அனுப்புவதற்கு அனுமதி அளிக்கப்படுமென அறிவித்துள்ளார்.

புதிதாக நிறுவப்பட்ட ஆப்கானிஸ்தான் அமைச்சர்கள் ஒருங்கிணைப்புப் பிரிவின் முதல் உயர்மட்டக் குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய இம்ரான் கான், மனிதாபிமான நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு ஆப்கானிஸ்தானுக்கு ஆதரவளிக்கும் கூட்டுப் பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உள்ளதென வலியுறுத்தியுள்ளார்.

தற்போது, பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானை இந்தியாவிற்கு பொருட்களை ஏற்றுமதி செய்ய மட்டுமே அனுமதிக்கிறது. ஆனால், எல்லை வழியாக வேறு எந்த இருவழி வர்த்தகத்தையும் அனுமதிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

ஓடும் பேருந்தில் பாரிய தீ விபத்து; 45 பயணிகள் பரிதாபமாகப் பலி

பல்கேரியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலையொன்றில் பயணித்த பேருந்து தீப்பிடித்ததில் குறைந்தது 45 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூர் நேரப்படி செவ்வாய்க் கிழமை போஸ்னெக் கிராமத்திற்கு அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 12 குழந்தைகளும் உள்ளடங்குவதாக, அமைச்சக அதிகாரி நிகோலாய் நிகோலோவ், தனியார் தொலைக்காட்சியிடம் தெரிவித்துள்ளார். இந்த விபத்திலிருந்து 7 பேர் காப்பாற்றப்பட்டதாகவும், கூறப்படுகின்றது.

துருக்கியிலிருந்து, வடக்கு மாசிடோனியா நோக்கி குறித்த பேருந்து பயணித்ததாக நம்பப்படுகின்றது.

கடும் வரட்சியினால் உணவு தண்ணீரின்றித் தவிக்கும் 23 லட்சம் சோமாலியர்கள்

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் நிலவும் கடும் வரட்சியினால் சுமார் 23 இலட்சம் பேர் போதிய உணவு, குடிநீர் இன்றி அவதியுற்று வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சோமாலியாவில் தொடர்ந்து நான்காவது வருடமாக இந்த ஆண்டும் போதியளவுக்கு மழை பெய்யவில்லை. இதனால், நீர் நிலைகளில் அதிவேகமாக நீர் குறைந்து வரட்சி அதிகரித்து வருகின்றது.

இதனால், இங்கு சுமார் 23 இலட்சம் வரையான மக்கள் போதிய உணவு மற்றும் குடிநீரின்றி தவித்து வருகின்றனர். கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் தங்களுக்கும், தங்கள் கால்நடைகளுக்கும் போதிய உணவு, குடிநீர் கிடைக்காதமையினால் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும், ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. இதேவேளை, வரட்சி நீடிக்குமானால், அடுத்த ஆண்டு, சுமார் 80 லட்சம் பேர் உணவுப் பற்றாக்குறை பிரச்சினையை எதிர்கொள்ளலாமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

சோமாலியாவில் கடந்த மூன்று தசாப்தங்களாக, போர்கள் அடிக்கடி நடைபெற்றன. அத்துடன், கடுமையான வறட்சி, வெள்ளம், பூச்சிகள் பயிரை அழிப்பது போன்ற பிரச்சினைகளையும் அந்நாடு எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அளவிற்கதிகமாக உணவைச் சாப்பிட்டு பிரபல உணவகத்தினால் தடை செய்யப்பட்ட நபர்

சோயா பால் குடித்தால் கூட இருபதிலிருந்து முப்பது போத்தல்களையும் குடிக்கின்றார். பன்றி இறைச்சி சாப்பிடும் பொழுது, நெருப்பில் வாட்டப்பட்ட 'க்ரில்' இறைச்சி உணவுகளை வழங்கும் பஃபே உணவகத்தினால், தாம் தடை செய்யப்பட்டுள்ளதாக சீனாவை சேர்ந்த காணொளிப் பதிவாளர் ஒருவர் கூறியுள்ளார். தாம் அதிகளவில் உணவு உண்பதைக் காணொளியாக இவர் வெளியிடுபவர்.

சாங்சா நகரிலுள்ள ஹண்டாடி சீஃபுட் பார்பிக்யூ பஃபே எனும் உணவகத்தில் இதற்கு முன்பு அவர் சில முறை தொடர்ச்சியாக உணவு உண்ட பின்பு, இவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளதாக காங் என்று மட்டுமே அறியப்படும் இந்த நபர் தெரிவித்துள்ளார்.

இந்த உணவகத்திற்கு காங் முதல் முறை சென்றபோது, ஒன்றரைக் கிலோ பன்றி இறைச்சியை சாப்பிட்டுள்ளார். அடுத்த முறை சென்ற பொழுது மூன்றரை கிலோவில் இருந்து நான்கு கிலோ எடை வரை உள்ள இறால் உணவையும் சாப்பிட்டுள்ளார். அதிக அளவில் உணவு உட்கொள்பவர்களை உணவகம் பாரபட்சத்துடன் நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

என்னால் அதிகமாக உணவு உண்ண முடியும். அது ஒரு தவறா? நான் எந்த உணவையும் வீணாக்கவில்லை, என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால், காங் தமது உணவகத்திற்கு வந்து உணவு உண்ணும் பொழுதெல்லாம் தமது பணம் வீணாகுவதாக அந்த உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு முறையும் அவர் எனது உணவகத்துக்கு வரும் பொழுது நான் சில நூறு யுவான்களை இழக்கிறேன். அவர் சமைக்கப்பட்ட அனைத்தையும் அவரே முடித்து விடுகிறார். இறால் வகை உணவுகளை உட்கொள்பவர்கள் பரிமாறும் இடுக்கியைப் பிடித்து, உணவுகளை எடுப்பார்கள். ஆனால் இவரோ அந்த தட்டையே எடுத்துக் கொண்டு செல்கிறார், என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதிக உணவு உட்கொண்டு காணொளி வெளியிடுபவர்கள் அனைவரையும் தமது உணவகத்தில் உண்பதற்குத் தாம் தடை விதித்துள்ளதாக, அந்த உரிமையாளர் கூறுகிறார்.

இந்தத் தடையானது, சீன சமூக ஊடகங்களில் பெரும் விவாதத்துக்கு உள்ளாகியுள்ளது. தங்களுக்கு இழப்பு நேரிடுகிறது என்று தோன்றினால், அந்த உணவகம் அனைத்தையும் உண்பதற்கான பஃபே முறையை கடைபிடிக்கக் கூடாதென, அதை விமர்சிப்பவர்கள் கூறுகிறார்கள். ஆனால், இவ்வாறு உண்பவர்களினால், அந்த உணவகத்திற்கு அதிகமான இழப்பு ஏற்படுவதாக கூறுபவர்களும் உள்ளனர்.

உணவுப் பழக்கங்கள் தொடர்பான காணொளிகளை வெளியிடுபவர்களுக்கு எதிராக, கடந்த வருடம் சீன அரசு நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது. இத்தகைய காணொளிகள் நாடு முழுவதும் தடை செய்யப்படுவதற்கான சாத்தியமும் சீனாவில் நிலவுகின்றது.

உணவுப் பொருட்கள் வீணாவதைத் தடுப்பது மற்றும் உணவுப் பற்றாக்குறை குறித்த கவலையை, சீன அதிபர் ஷி ஜின்பிங் வெளியிட்ட பின்பு, சீன அரசு இந்த நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியுள்ளது.

அமேசன் வலைத்தளத்தைப் பயன்படுத்தி மிகப் பெறுமதி வாய்ந்த போதைப்பொருள் கடத்தல்

-மூத்த நிர்வாகிகள் மீது வழக்கு-

அமேசன் வலைத்தளத்தைப் பயன்படுத்தி இருவர் மரிஜுவானா போதைப்பொருள் கடத்தியதாக கூறப்பட்ட நிலையில், இந்தியாவிலுள்ள அந்நிறுவனத்தின் மூத்த நிர்வாகிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சென்ற வாரம், மத்தியப் பிரதேசத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு 20 கிலோ போதைப்பொருள் கடத்தியதாகக் கூறி பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்த நபர்கள், அமேசன் வலைதளத்தில், சர்க்கரைக்கு மாற்றாகப் பயன்படுத்தப்படும் இயற்கை இனிப்பான ஸ்டீவியா இலைகள் எனக்கூறி, கனாபிஸ் போதைப்பொருளை விற்றதாக பொலிஸார் கூறுகின்றனர். இது குறித்த தகவல்களை பொலிஸாரிடம் தாம் பகிர்ந்துள்ளதாக அமேசன் நிறுவனம் கூறியிருக்கிறது. 'தவறான நடத்தையை அமேசன் சிறிதும் சகித்துக்கொள்ளாது, எங்கள் கொள்கைகளையோ, சட்டங்களை மீறும் நபர்கள் மீதோ, மூன்றாம் தரப்பினர் மீதோ அமேசன் கடுமையான நடவடிக்கை எடுக்குமென கூறியுள்ள அந்நிறுவனம், சட்டவிரோதமான பொருட்கள் பட்டியலிடப்படுவதையோ, விற்பதையோ அனுமதிப்பதில்லை எனவும், சட்டவிரோதமான பொருட்கள் சார்ந்த விதிகளை மீறும் விற்பனையாளர்கள் மீது, கடுமையான நடவடிக்கை எடுக்குமெனவும் தெரிவித்திருக்கின்றது.

அமேசான் வலைத்தளம் வழியாக, சுமார் 148,000 டொலர்கள் (இந்திய மதிப்பில் சுமர் 1.1 கோடி ரூபா) மதிப்புள்ள 1,000 கிலோ மரிஜுவானா போதைப் பொருள் கடத்தப் பட்டிருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இது அமேசானின் இந்தியத் தொழில் பிரிவு எதிர் கொண்டிருக்கும் வெகு சமீபத்திய வழக்காகும். இந்நிறுவனம் ஏற்கனவே இந்தியாவில் தொழில்சார் போட்டி, குறித்த ஒரு விசாரணையை எதிர்கொண்டு வருகின்றது. செப்டம்பர் மாதத்தில், அமேசன் நிறுவனம், இந்தியாவின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களோ, அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்ததாக, எழுந்த புகார்களின் அடிப்படையில், அந்நிறுவனம் ஒரு உள்ளக விசாரணையை ஆரம்பித்தது. சமீபத்திய ஆண்டுகளில், போதைப் பொருள் கடத்தல் மற்றும் பயன்பாட்டிற்கு எதிரான தங்கள் நடவடிக்கைகளை, இந்திய அதிகாரிகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளனர்.

சென்ற மாதம், பொலிவுட் சூப்பர்ஸ்டார் ஷாரூக்கானுடைய 23 வயது மகன் ஆர்யன் கான், ஒரு விருந்தில் போதை மருந்து பயன்படுத்தியதாகக் கூறி, கைது செய்யப்பட்டார். இந்த வழக்கு இந்திய ஊடகங்களில், வெகு வாகப் பேசப்பட்டமை நினைவு கூரத்தக்கது.

கொரோனா ஊரடங்கு உத்தரவை எதிர்த்து ஐரோப்பிய நாடுகளில் வன்முறைகள்

ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்து வருவதனால், ஊரடங்கு பிறப்பித்ததை எதிர்த்து, சில நாடுகளில் வன்முறைகள் வெடித்துள்ளன.

கொரோனா அச்சம் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஆஸ்திரியாவில் 20 நாட்கள் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நெதர்லாந்திலும் கடந்த சனிக்கிழமை முதல் ஊரடங்கு பிறப்பித்துள்ளது. எதிர் வரும் பெப்ரவரி 1 முதல் அனைவருக்கும் தடுப்பூசி கட்டாயமென உத்தரவு பிறப்பிக்கப்படவுள்ளது.

கொரோனாவை ஒழிப்பதற்கு சமூக இடைவெளி, மாஸ்க் அணிதல் மட்டுமின்றி தடுப்பூசியும் அவசியம் எனப் புரிந்து கொண்ட நாடுகள் மக்களை காப்பாற்ற அனைவருக்கும் தடுப்பூசி கட்டாயமென அறிவித்துள்ளது. மேலும், தடுப்பூசி போட்டவர்களுக்கு மட்டுமே பொது இடங்களில் அனுமதி, விமானத்தில் பயணம் செய்யவும், வெளி மாநிலங்கள், வெளி நாடுகள் செல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே, கொரோனா காரணமாக பொருளாதாரத்தை இழந்துள்ள பொதுமக்கள், மீண்டும் இதுபோன்ற உத்தரவுகளினால் ஆத்திரமடைந்துள்ளனர்.

இதனால், செய்வதறியாது அந்நாட்டு அரசாங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன. நெதர்லாந்தில் ஊரடங்கு உத்தரவுக்கு எதிராக, பொது மக்கள் வன்முறையில் ஈடுபடும் காணொளிகள் வெளியாகியுள்ளன. வன்முறை தொடர்பான காணொளிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. கலவரக்காரர்கள் கற்களை வீசுவதும், பொலிஸாரின் வாகனங்களை எரிப்பதும் காணொளிகளில் பதிவாகியுள்ளது. கொரோனா நோய்ப் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், ஐந்தாவது அலைக்கு பயந்து, பிரான்சும் மீண்டும் கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு செய்துள்ளது. அங்கே ஊரடங்கு அறிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, ஆங்காங்கே ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனாலும், ஐரோப்பிய நாடுகளில், உணவகங்கள்,அலுவலகங்கள் மற்றும் கடைகள் போன்ற பொது இடங்களிலிருந்து தடுப்பூசி போடப்படாத நபர்களுக்கு, கட்டாயம் அனுமதி தரக் கூடாதென, அறிவித்துள்ளன.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.